முற்றும் மதிகெட்ட மூட வடபுலத்தீர்!
குற்றுமி மேன்மேல் குத்திச் சலிப்பதுபோல்
ஒற்றுமை என்றும், ஒருமைப்பா டென்றுமே
வெற்றுரை பேசிடுவீர்; வீணே செயல்புரிவீர்;
செற்றுச் சிதைத்திடவே சட்டங்கள் செய்திடுவீர்.
பற்றின்றி இதனைப் பகர்கின்றேன்: "பார்ப்பானின்
வெற்றுடலில் பூணூல் விளங்குவரை, அந்நெஞ்சில்
முற்றியுள "சாதிமத" முட்காடிங் குள்ளவரை,
அற்றை "மனுநூல்" அழியுவரை – இங்கிலத்தே
ஒற்றுமையும் பூக்காது; ஒருமையுளம் காய்க்காது;
மற்றிந்த மக்கள் மனங்கனிய மாட்டாது;
கற்றறிந்தும் மீட்சியில்லை; காண்!"

தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடி 6; ஓலை 4.
விடை (வைகாசி)
தி. பி. 1999.

விலை: 75 காசு.

நமக்கு வந்த மடல்கள்.

0 தங்களின் ஆசிரியவுரையில் மேலும், மேலும் அரசியலை எழுத முனைவீர்களாயின் தென்மொழியின் புகழ் மங்கும் என்பது உறுதி. தில்லி நடுவண் அரசையோ, அல்லது தமிழக அரசையோ தாங்கள் இடித்துக்கூறி, தமிழருக்குத் தனியொரு புகலிடம் தரக்கோரலாமே யல்லாது எந்த இயக்கத்தையும் அரவணைப்பது அவ்வளவு நல்ல தன்று. எந்த ஓர் அரசியல் இயக்கமாவது தமிழை வளர்ப்பதுபோல் நாடகமாடுமாயின் அது தனது சொந்த நலம் கருதியேயாம்! இந் நிலையைத் தாங்கள் உணர வேண்டும். தமிழ்மீது தங்களுக்கு இருக்கும் தணியாத பற்றினை யான் உணர்கிறேன். அகம் மிக மகிழ்கிறேன். ஆனால் "தமிழுக்காக ஈகம் செய்கிறேன்" என்று கூறுகிறார்களே அவர்களைக் கண்ணை மூடிக்கொண்டு அரவணைப்பதை முழுமையும் எதிர்க்கிறேன். அரசியல் வேண்டா. தென்மொழி ஒன்றின் வாயிலாகவே வருங்காலச் செல்வங்களைத் தமிழ்காக்கும் மறவர்களாக ஆக்கிடும் பணியில் கண்ணும் கருத்துமாய் இருக்கவேண்டுமாய் வேண்டுகிறேன். தி. வீ. பாண்டியன், திருத்துறைப்பூண்டி,

0 அன்புடையீர், தங்கள் மடல் கிடைத்தது. தமிழ் இசையைப் பற்றிய என்னுடைய கட்டுரை காலம்தாழ்த்தி வெளியிடுவதைப் பற்றி நான் கவலைப்படேன். இசைத்துறையிலும் தமிழ்மக்கள் மேம்பட்டிருந்தது உலகத்தமிழ்க்கருத்தரங்கில்பேசப்பட்டிருக்கவேண்டும் என்பது என் கருத்து. ஆங்கிலத்தில் இதைக்குறித்து நான் எழுதிய கட்டுரையை ஏற்றுக்கொண்டாரிலர். தமிழக அரசு மலர் வெளியீட்டிலும் இதைப் புறக்கணித்தனர். ஆதலின் விரும்பிக் கேட்ட தமிழிசைச் சங்க வெள்ளிவிழா மலருக்கு அவர்கள் விரும்பியவாறு ஆரியம் கலந்து எழுத நேர்ந்தது. அதைத் தாங்கள் தூய்மை செய்ய முனைந்து வெளியிட ஏற்றுக் கொண்டமைக்கு என் நன்றி உரியது.

'பழந்தமிழிசை' என்று ஒரு நூலும் முன்பே எழுதி உள்ளேன். இப்போது அது கையில் இல்லாததால் தங்கட்கு அதை அனுப்ப இயலவில்லை. சென்னைப் பல்கலைக்கழகத்தில் திருக்குறள் காமத்துப் பாலைப்பற்றி நான் ஆற்றிய ஆங்கிலச் சொற்பொழிவுகளின் படி ஒன்று இன்று நூல் அஞ்சலில் தங்கட்கு அனுப்பியுள்ளேன். அதையும் துருவி ஆராய்வீர்களாக.

இசைப்புலவர்–கு. கோதண்டபாணி, செம்மங்குடி திருச்சேறை.

0 கடந்த 'மேழம்' இதழ்க்கண் 'நமக்குவந்த மடல்கள்' பகுதியில் ஓரன்பர், சில தாளிகைகள், தங்களைத் தமிழ்த் தாளிகைகள் எனப் பறைசாற்றிக் கொண்டு, திருவள்ளுவரது 2000–ஆவது ஆண்டு எட்டிக்கொண்டிருக்கும் இவ்வேளையிலும் வள்ளுவர் ஆண்டினை மேற்கொளாநிலை கண்டு உளம் கவலுறுகின்றார்; உண்மையே. அதுமட்டுமன்று; அன்பர் எடுத்துரைத்த தமிழ்த் தாளிகைகள் அனைத்தும் தம்மைத் 'தேன் சொட்டும் தமிழ்ப் பத்திரிகை', 'தமிழ்மக்கள் விரும்பும் ஒரேபத்திரிகை, எனவும் பறைசாற்றிக் கொள்கின்றன: அவைதம் சொன்னடை, சொற்றொடர் அமைப்பு, வடமொழி எழுத்துக்கலப்பு, பொருளற்ற அசைச் சொற்கள் (சதக்...சதக்) ஆய இவற்றைக் கண்ணுறும்போது, உண்மைத் தமிழன் நெஞ்சம் செந்நீர் வடிக்கும். இவையும் தமிழ்த் தாளிகைகளா...? எது வேண்டுமென்றாலும் அச்சிட்டு வெளியிடலாம் என்று செருக்கா...? இல்லை... எப்படியும் வெளியிடலாமென்ற இறுமாப்பா...? மாந்தன் இப்படித்தான் வாழ வேண்டுமென்று ஒழுங்கு ஒன்று கொளல் நலம்: எப்படியும் வாழலாமெனின் அவர்க்கு ஏதையா புலம்? அத்தாளிகைகள் என்று மாந்த

(தொடர்ச்சி 3–ஆம் அட்டைப்பக்கம்



தென்மொழி

இலக்கிய இதழ்

“கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை” எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி-6: ஓலை-4

விடை (வைகாசி) தி. பி. ௧௯௯௯ (1968-சூன்)
பொறுப்பாசிரியர்:- பெருஞ்சித்திரன்,
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

ஓ! திரைப்படக்காரரே!

ஓ!
திரைப்படக் காரரே!
திரைப்படக் காரரே!
புரைசெயும் குழுகாயப்
புழுக்களே! ஓ!ஓ!
கறைசெயும் மன்பதைக் கைகளே! இருளில்
மறைந்திருந் தென்றும் மக்களை உறிஞ்சிக்
கொழு கொழு வென்றே கொழுத்துத் திரியும்
தொழுநோய்ப் புழுக்களே! திரைப்படக் காரரே!

கதை—எனும் பெயரால் காமக் கழிசடைப்
புதையினுள் மூழ்கிப் புரண்டபட் டறிவால்—
கற்பனை என்னும் கசிகின்ற சீழை
ஓட்டைத் தூவலில் ஊற்றிக் கொண்டு
பெங்களூர் உதகை குற்றாலம் எனப்போய்த்
தங்கி யிருந்தே 'தறுதலை' மொழியில்
உளறிக் கொட்டி ஊர்கெடுப் போரே!
களரில் முளைத்த கள்ளிச் செடிகளே!

பாட்டு—எனும் பெயரால் படுக்கை யறையினில்
காட்டுக் கழுதைபோல் கட்டிப் புரண்ட
நிகழ்ச்சியை எல்லாம் நீட்டி முழக்கி
இகழ்ச்சி சேர்க்கும் இழிதகை யோரே!

இசை—எனும் பெயரால் கெக்கலி இரைச்சலைப்
பிசைந்து திரட்டி குரல்தின வடக்க
'ஏஏ' என்றும் 'ஓஓ' என்றும்
கோவேறு கழுதைக் குரலில் ஒலித்து
வீட்டுக்கு வீடு விளங்குவா னொலியில்
காட்டுக் கூச்சலைக் காது புளிக்க
அளித்திடும் கயவரே! அரைகுறை மாந்தரே!
புளித்திடும் கழுநீர்ப் பானைவீழ் வோரே!

கொள்ளை யிடுபணம் கோடிக் கோடியாய்
மொள்ளைத் திரைப்படப் பிடிப்பினில் மூழ்க்க,
அவலுக்குப் பொக்கையன் அலைவது போல
இவளுக்கும் அவளுக்கும் இராப்பகல் அலைந்து
கட்டிலில் கண்டு காலைப் பிடித்துக்
கொட்டிக் கொடுத்துக் குமுகா யத்தைச்
சிதற அடிக்கும் முதலாளி மாரே!

நடிப்பெனும் பெயரால்—நள்ளிராப் பகல், படப்
பிடிப்பெனும் பெயரால்—பேய்மகள் ஒருத்திக்குத்
தொய்ந்திடு மார்பகம் தூக்கிக் கட்டிக்
கொய்த இளமை எய்த உடுத்தித்
துவண்ட இடையினைத் துவளா நிறுத்தி
அவல விழிக்கு மையிட் டெழுதி
குழிந்த கன்னத்து மண்குழை அப்பி
இழிந்த தோற்றத்தை எடுப்பாய்ப் புனைந்து

கெக்கலி செய்யும் கோணையன் ஒருவனோ
டொக்க நிறுத்தி "ஊஊ" வென்றே
ஊதற் காற்றில் உடல்நடுங் கிடல்போல்
மோதச் செய்வதும், முகத்தொடு முகத்தைத்
தேய்க்கச் செய்வதும், தேக்கிய நீரில்
பாயச் செய்வதும் அமெரிக்கப் பாணியில்
ஆடச் செய்வது மாக,—ஊர் கெடுக்கும்
பேடியர் பெற்ற பேடன் மாரே!
இயக்குநர் என்னும் வயக்கொடி யோரே!

தாயெனும் பெயரால் தகவிலா ஒருத்தி,
சேயெனும் பெயரால் பெற்றுப் போடக்
கன்னிப் பெண்ணாய்க் கனிந்த காலை,
சென்னைத் தெருக்களில் தன்னை விற்றுத்
திரைப்படப் பிடிப்பகம் கறைபட நுழைந்து
உரை, செயல், முதலா உடல்பொய்த் தொழுகி
செல்வம் புரளும் கைகளில் உருண்டே
அல்லும் பகலும் அரங்கம் ஏறி
மைவிழி சுழற்றி எழுதுஇமை நெறித்துப்
பொய்யின் புனைந்த மெய்படக் காட்டிக்
கணக்கிலாக் கயவோர் பிணைய உடன்பட்டு
மணங்கொள் பெண்டிர் மயக்குற ஆடிப்
பண்பெனும் நெறிமுறை புண்படச் செய்த
நடிகை யோரே! நடிகை யோரே!
பெண்ணாய்ப் பிறந்த பெறலரும் சிறப்பை
மண்ணாய்ச் செய்யும் நடிகை யோரே!

'நடிப்பெனும் பெயரால் நண்டுவாய்க் காலியின்
கொடுக்குகள் போலக் காலையும் கையையும்
நீட்டி மடக்கலும் நெடுங்கூத் தாடலும்
மேட்டிலும் பள்ளத்தும் மேனி உருள்வதும்
குழையக் குழையத் தெருநாய் போல
இளைய பெண்டிரை வளைய வருவதும்
பஞ்சுப் பொதிபோல் படுத்துப் புரள்வதும்
சினைத்த பன்றிபோல் உறுமித் திரிவதும்
கனத்த குரலில் காட்டுக் கத்தலாய்
ஓலம் இடுவதும், புழுப்போல் உடலை
நெளிப்பதும் சுழிப்பதும் நெட்டுயிர்ப் புறுவதும்
நாண மின்றிக் குரங்குக் குட்டிபோல்

கோணங்கித் தனங்கள் செய்வது மாக
இளையோர் மனத்தை அலையச் செய்யும்
நடிகன் மாரே! நடிகன் மாரே!
வடியா இழிமொழி மலவாய் பிலிற்றும்
விடியாத் தமிழக நடிகன் மாரே!

கலை—எனும் பெயரால் காட்டும் திரைப்படக்
கொலைக்களம் போகிப் பொழுதினைக் கொல்லும்
திரைப்படப் பித்தரே! திரைப்படப் பித்தரே!
சிறைப்படும் உள்ளமும் உயிரும் சிதைத்தே
கழிசடை நடிகையின் காமத் தோற்றத்தைப்
பழியிலா ஓவியம் எனவே வாங்கிச்
சுவரிலும், கதவிலும், சுவடிக் கிடையிலும்
உவப்புறச் சட்டைப் பையிலும் வைத்து
நாளும் அழுகிடும் உள்ள நைவினால்
மேலும் மேலும் சிதைந்தழி கின்ற
திரைப்படப் பித்தரே? திரைப்படப் பித்தரே!
மறைவிலாக் கொட்டிய மலக்குவி யல்களே!

யாவரும் கேட்க இதைஉரைக் கின்றேன்:
(மேவன செய்கலால் தேவரும் கயவரே!)

உங்களை நீங்களே ஒழித்துக் கொள்ளும்
கங்குல் உலகமே திரைப்பட உலகம்!

நீங்களும் உங்கள் திரைப்படப் பெண்டிரும்
யாங்ஙன மேனும் கட்டிப் புரளுக!
ஒப்புதல் இல்லா ஒழுங்கினால் நீவிர்
எப்படி யேனும் புழுத்துச் சாகுக!
ஆனால் உங்கள் அறைகளில் நடப்பதை
ஏனோ மக்க ளிடையிலும் காட்டி
இளையோர் மனத்திலும் தீயுணர் வெழுப்பிக்,
களைகளாம் எண்ணம் கனிய ஊன்றினிர்?
காசுகள் பறிக்கக் கயமையைக் காட்டி
மாசுகள் வளர்த்து மனம்குளிர் கின்றீர்!

காம நினைவினை எழுப்பலோ கலைகள்?
தீமையை விளைப்பதோ திரைப்படக் கூத்து?
குயிலெனப் பாடும் குரலினள் ஒருத்தியை
நயமிலாது அலப்பச் செய்வதோ இன்னிசை?

சென்னைச் சேரியில் மொழிவதோ செந்தமிழ்?
என்ன பயன்களை இவற்றால் செய்குதிர்?
மலத்தினால் சந்தன மணம்கூட் டுவதோ?
நிலத்தினால் மழைநீர் நிறந்திரி யாதோ?

நாணம் அறுத்த நங்கையைக் கொண்டு
மானம் இன்றி மார்புக் கச்சையை
இறுக்கக் கட்டி எடுப்பாய்க் காட்டினால்
முறுக்குடை இளைஞரின் மனம்முறி யாதோ?

கடைகெட்ட சிறுக்கியர் காம உணர்வினால்
தொடையைக் காட்டினால் மனம்துவ ளாரோ?

அமெரிக்க நாட்டில் அப்படிச் செய்தால்
எந்தமிழ் நாட்டிலும் இப்படிச் செய்வதோ?

சாய்க்கடை நீருக்குச் சருக்கரை இடுவதால்
போய்க்குடித் துவக்கும் புல்லரும் யாவரோ?

பண்புள்ள நாட்டைப் பாழ்செயப் பிறந்தீர்!
கண்படைத் திருந்தும் கால்மலம் மிதித்தீர்!
திரைக்குள் நடப்பது தெருவில் வருவதா?
புரைசெயும் மண்டையுள் புதைந்தது சாணியா?
ஆண்கள் என்ன உலா வருகின்றீர்!
மாண்பு தவிர்த்தீர்! மக்களைக் குழப்பினீர்!

திரைப்பட நாற்றம் தெருவெலாம் வீசும்!
நரைத்த கிழவரும் நல்லிளை யோரும்
குரைக்கும் நாய்களும் கூட்டத்துப் பன்றியும்
திரைப்படப் பாட்டையே பாடுவதன்றி
வேறொரு பாட்டை விளம்பக் கேட்டிலமே!
கூறு கூறாகத் தீமையைக் கொட்டினீர்!
வாருதற் கெத்தனை அறிஞர் வந்திடினும்
சேர்ந்துள குப்பையைக் கூட்டுதல் ஒல்லுமோ?

'டப்பாங்' குத்துப் பாடலைத் தவிர
ஒப்பும் கருத்திலோர் பாடலை யேனும்
திரைப்படப் பாவலன் என்னுமோர் தீயன்
உரைப்பக் கேட்டமா? உலகம் பொறுக்குமா?
பாட்டுக்கு 'ஆயிரம்' பறிப்ப தல்லால்
நாட்டுக்கு வந்த நன்மை என்ன?
உலகம் உருப்பட உயர்ந்த கருத்தில்

இலவசப் பாடல் எழுதும் பாவலர்
அருந்தமி ழகத்தில் ஆயிரம் இருக்க
அருந்துங் குடிமயக் குற்ற உளறலைப்
பாட்டெடன வாங்கிப் பசுமை மனங்களில்
கேட்டை வளர்க்கும் கேடரே! கேட்க:

உங்கள் மனைவியும் மகளும் ஒழுங்கிலா
தெங்கணும் நாய்போல் இழிந்து திரிவதை
ஒப்புமோ உள்ளம்? ஊர்ப்பெண்டிர் வேறோ?
தப்புமோ தரையினை அறைந்தவன் தன்கை?

தெருத்தொறும் எங்கும் திரைப்பட விளம்பரம்!
பருத்துள மார்பகம்! பாதிமே லாடை!
இடைத்துணி நழுவிட இளிக்கும் பெண்களின்
தொடைதெரி வதுபோல் பெருஞ்சுவ ரொட்டிகள்!
துவண்டபெண் ஒருத்தியைத் தோள்மேல் தூக்கல்போல்!
கவண்போல் இரண்டு கால்களை விரித்து
நீட்டிப் படுத்துள நிலையினில் ஒருத்தி!—
ஏட்டில் இயம்பொணு இழிந்த காட்சிகள்!

திரைப்படச் செய்திகள் வெளியிடும் இதழ்களோ
சிரைத்த மயிர்த்திரள்! சேற்றில் மலக்குழை!
அட்டைப் படமுதல் அடுக்கடுக் காக
ஒட்டடைப் படைபோல் ஒவ்வொரு பக்கமும்
திரைப்பட நடிகையின் அரையுடைத் தோற்றம்!
உரைகளோ—அவர்தம் உணவுகள், உடைகள்,
புனைவுகள், திருமணப் புனைந்துரை, வாழ்க்கை,
கனவு நினைவுகள், கருக்கொண்ட செய்திகள்
இன்னும் பலப்பல இழிவுபற் றியன!
இன்ன செய்தியால் விளைகின்ற தென்ன?

மக்கள் பெறுகின்ற மன இழிவு எத்தனை?
தக்கவோர் மன்பதை உருவா கிடுமா?
இன்ன கழிசடை இதழ்களை நடத்துவோர்
அன்ன செய்தியால் பயன்பெறல் அல்லால்—
விளம்பரப் பயனால் நடிக நடிகையர்

வளம்படல் அல்லால், வருகின்ற பயன்ஓர்
எள்முக் கத்துணை—எறும்புமுக் கத்துணை
மக்களுக் காகிலும் நாட்டுக் காகிலும்
தொக்கக் கிடைக்குமா? துயரனறே மிச்சம்!
திரைப்படத் துறையே கறைப்பணத் தொட்டி!
வரைபடத் திருத்துதல் கடினம் என்பதால்
குறைகளை மலையாய்க் குவிய விடுவதா?
கறைகளைக் கலையெனப் போற்றிக் காப்பதா?
வெள்ளிப் பணத்தை வீசுவ தாலே
குள்ளச் செய்கைக்கு யாவரும் குனிவர்
என்பதற் காகப் பண்பை இழப்பதா?

அன்புதான் எதற்கு?மற் றறிவுதான் எதற்கு?
பண்புதான் என்ன? பணமே பயனு?
பெண்மை திரிந்திடில் ஆண்மை பிழைக்குமா?

காதல் என்றெரு தூய உணர்வினை
ஓதல் நல்லதோ? உணர்தல் நல்லதோ?
இடையிலும் மார்பிலும் இணைவதோ காதல்?
தொடையிலும் வயிற்றிலும் தெரிவதோ காதல்?
கற்பனை இல்லாக் கயவோர் தம்கதை
விற்பனை யாகிடச் செய்யும் விரகிது!

"கோப்பையில் குடிபுகும்" கூவத்துப் பாவலன்
ஏப்பம் விட்ட வாடையில் எழுதும்
ஒற்றை வரிக்கே ஒருநூறு என்ருல்
அற்றைப் புலவரின் அழியா இலக்கியப்
பாடலுக் கெத்தனைக் கோடி படைப்பது?
ஊடலும் கூடலும் அவற்றில் இல்லையா?

புதுவைப் புலவன், புரட்சிப் பாவலன்
எதனைப் பற்றி எழுதிட வில்லை?
காதலைப் பற்றி உரையாக் கருத்தெது?
தீதாய் ஒருவழி தேர முடியுமோ?

பெண்மையின் மறைவைப் பிட்டுக் காட்டுதல்
பெண்மையின் சிறப்பை மண்ணிட்டுப் புதைக்கும்!

காமப் புனலுள் நீச்சல் கற்றவன்
ஏமக் காதலை விளம்புதல் எப்படி?
தெருக்கூத்துக் கோமாளி திரைப்படம் நுழைந்தால்
ஒருகூத்துக் கொருகூத்து ஒப்பாரி! ஆலோலம்!

'சுசீலா' என்னொரு குயிலிசைக் குரலியை
மசாலைப் பாடல்கள் பாடச் செய்வது
குழலினுல் மலத்தைக் குழைப்பது போலாம்!
பழகு தமிழிசைப் பாடலைப் பாடினுல்
எத்தனைத் தமிழ்உளம் இன்பத்தில் மிதக்கும்?
எத்தனைத் தாழ்வுளம் இதனுல் உயரும்?
'தமிழுக்கும் அமுதென்று பேர்' எனும் பாடலை
கமழக் கமழக் கேளாத செவிஎது?

"சௌந்தர ராசனை" திரைப்பட இழிஞர்
எந்தப் பாடலைப் பாடச் செய்வது?
இழுப்பு வந்தவன் இசைபோல் இழுத்திடும்
மழுக்குடை பாட்டையா பாடச் செய்வது?
பணம் வரும் என்று, இப் பாடகர் தாமும்
பிணவுநாய் ஊனைபோல் முக்கித் தீர்ப்பதா?

'எலந்தப் பயம்' எனும் பாடலைப், பெண்மை
நலந்தவிர் ஒருத்தி நடுத்தெரு வினிலே
பாடியும் ஆடியும் பழம்விற் பதுபோல்
ஓடும் திரைப்படக் காட்சி ஒன்றிலே
வெறுப்புற-பெண்கள் வெட்க முறும்படி
உறுப்புகள் காட்டி அருவருப் பாகத்
தோன்றிய தன்மையில் வெளிநாடு தோற்றது!
கான்றுமிழ் கின்ற அக் காட்சிக் காகவும்
பண்பி லாஅப் பாட்டிற் காகவும்
எண்ணிலா இளையோர் பன்முறை பார்த்தனர்!
பெண்டிரைத் தாழ்த்திடும் பண்பிலாக் காட்சியால்
மண்டிய செல்வம் சுரண்டிடும் கயமை
நாளுக்கு நாளாய் நந்தமி ழகத்தில்
வாளுக்கு நஞ்சுபோல் வளர்ந்திட லானதே!

பார்க்க வருகிறார் என்பதால் பண்பினைத்
தூர்க்க முயல்வதோ? தொலைக்க முனைவதோ?
"பார்க்க விழைகின்றார் என்பதும் பழுதுரை!
ஆர்த்த பழங்காலத் திரைப்பட இசைகளைக்
கேட்டு மகிழாத செவிகள் இருக்குமா?
ஆட்டமும் கூத்தும் அவற்றில் இல்லையா?
கதைகள் இல்லையா? காட்சிகள் கொஞ்சமா?
புதைந்த கருத்துகள் எத்தனை எத்தனை?
நடிப்புகள் சோடையா? பிடிப்பினில் குறையா?
உடுப்புகள் எத்தனை ஒழுங்கொடு திகழ்ந்தன?

தியாக ராசப் பாடகர் முன்னம்,
வயங்கு கண்ணம்பா, சின்னப்பா எதிரில்,
நகைச்சுவை யரசர் கிருட்டிணன் பக்கம்,
பகை கொளும் நடிப்பில் பாலையா தம்முடன்
இற்றைத் திரைப்பட நடிகரில் ஒருவர்
நிற்றல் இயலுமா? நிலைக்குமா இவர்புகழ்?
ஆடிய அன்றையத் திரைப்படக் கதைகள்
ஓடிய மாதங்கள், ஆண்டுகள் எத்தனை?
இந்நாள் படங்களோர் மாதம் இருக்குமா?
அந்நாள் மக்களுக் கறிவுக் குறைச்சலா?

உண்மை என்ன? உணர்கின் றீர்களா?
நன்மை தருவதே மக்கள் நாடுவர்!
பொழுதைப் போக்கவோ திரைப்படம் வந்தது?
பொழுதைப் போக்கவே என்று கொண் டாலும்
பழுதுற நடந்தா பொழுதைக் கொல்வது?
ஒழுக்கம் குலைவுற நடப்பதா ஓய்வு?
மனத்தைச் சிதைப்பதா மனம்பெறும் மகிழ்ச்சி?
தன்னை அழிப்பதா தான்பெறும் வாழ்க்கை?

திரைப்படக் காரர் ஒருநூறு பேர்கள்
மறைப்புற நடத்தும் ஒழுக்கக் கேடே
கலைகள், இசைகள், காட்சிகள் என்றால்
நிலைகுலைந் திடட்டும் நெடியஇவ் வுலகம்!
மலைகளும் கடலும் குமுறி எழட்டும்!

விலைமதிப் பற்ற உயிர்க்குலம் விழட்டும்!
ஒருசிறு கூட்டம் உலகைச் சிதைப்பதா?
பெருகிய மக்கள் பேச்சற் றிருப்பதா?
குடியரும் களியரும் கூத்தரும் காமரும்
தடியரும் கயவரும் தரங்கெட வாழ்வரும்
அமைத்துக் காட்டிடும் அமைப்பே கலையெனில்
எமைப் பாட் டுணர்விஞல் எழுப்பிச் சிதர்த்திடும்
முங்குபே ராற்றலின் முனைப்புக் கென்பெயர்?
தங்குபே ருலகின் ஒழுங்கிற் கென்பெயர்?

அழுக்கிலா ஒன்று தூய்மையா வதுபோல்
ஒழுக்கம் என்பதன் உருவமே கலைகள்!
சிதறிய தூசுகள் தூய்மையா காப்போல்
சிதறிய ஒழுக்கமும் கலைகள் ஆகா!
ஒருதுறை நேரிய உணர்வுக் குவியலே
ஒருதுறைச் சிறப்பினை வளர்க்க உதவும்!
விலைமகள் நடத்தை கலைகளும் ஆகா!
குலைவுறும் மனத்தை வளப்பமும் செய்யா?
உளத்தைக் ‘கல்’வது கலையென உரைக்க!
உளத்தைக் ‘கொல்’வது ‘கொலை’யா? ‘கலை’யா?

திரைப்படக் கருவியால் எத்தனை செய்யலாம்?
உரைப்பதைக் காட்டிலும் உணர்வதைக் காட்டிலும்
காட்சியால் ஒருவனின் கண்களைத் திறந்து
மீட்சி கொண்டிடத் திரைப்படம் மேலதே!
எத்தனை நாடுகள்! எத்தனை மக்கள்!
எத்தனைக் காட்சிகள்! எத்தனை மாட்சிகள்!
அத்தனை யும்போய்ப் படத்தினில் கொணர்ந்து
எத்தனை மக்களின் விழிகளைத் திறக்கலாம்!

நம்நாடு என்ன? பல்கலைக் கழகமா?
செம்புது வெள்ளமாய்க் கல்விபாய் கின்றதா?
எத்தனைக் காலமாய் இழிந்ததிந் நாடு?
பித்தெனும் சாதிப் பேய்களி னாலும்
சமயச் சாய்க்கடைக் குப்பைக ளாலும்
அமைந்த இழிவினை அகற்றவே இன்னும்

நூறுநூ றாண்டுகள் செல்லினும் செல்லுமே!
வேறு தீமைகள் விளம்பலும் வேண்டுமோ?
பார்ப்பன நஞ்சு பரப்பிய கொடுமையின்
ஆர்ப்பரிப் பின்னும் அடங்க வில்லையே!

தாளிகைத் துறையில் தான்தோன் றிகள்சில
தூளி பரப்பித் தொலைத்தன தமிழை!
'கூவ' நீரினைக் குவளை குவளையாய்த்
தூவலில் ஊற்றி எழுதத் தொடங்கின!
இந்தத் தீமையைத் தொலைப்பதும் என்றோ?
கந்தல், உள்ளக் கழிசடை வாழ்க்கை
அங்கிங் கென்று நாட்டைஆட் கொண்டது!
இங்கிங் கெல்லாம் நினைவுகள் எழுவதால்
திரைப்படத் துறையைத் தீண்டுவ தில்லென
வரைப்பட நின்றோம்! வருந்தி இருந்தோம்!
நின்றவன் எழுமுன் எழுந்தவன் நடந்தான்
என்ற கதையாய் இழிந்தது திரைப்படம்!

ஆகவே, ஓ!ஓ' திரைப்படக் காரரே!
வாகாய்த் திருந்தி வருங் காலத்தில்
நல்ல கதைகளில் நாட்டஞ் செலுத்துக!
நல்ல பாடல்கள் நாட்டுக்குத் தருக!
நடிகர் நல்ல நடிப்பினை நாட்டுக!
நடிகையர் பெண்மையை நங்கையர்க் குணர்த்துக!
படப்பிடிப் பாளர் பண்பைக் காட்டுக!
படத்தின் இயக்குநர் பாடறிந் தொழுகுக!
நாட்டைத் திருத்திடும் நல்ல தொண்டினில்
நாட்டங் கொள்க நானிலம் சிறக்கவே!

—பெருஞ்சித்திரன்.

"தமிழியக்கம்"-அமைப்புக்கூட்டம்.

தவிர்க்கவியலாக் காரணங்களால் இக்கூட்டம் குறிப்பிட்டபடி சூன்மாதத்தில் நடைபெற வில்லை. விரைவில் இதுபற்றி அறிவிப்பு வரும்.

—ஆசிரியர்.



மக்களவை

உறுதிமொழி.

தென்மொழிக் காவல,

காற்றிடைச் சருகாய், சேற்றிடைப் புழுவாய், மொழியுரிமை மறந்து, நம்மை நத்திப் பிழைக்கும் ஆரியப் பார்ப்பனர் காலிடை வீழ்ந்து, அடிமைத் தனத்திற்கு ஒருமைப்பாடு எனப் பெயரிட்டுத் தம்மைத்தாமே தாழ்த்தித் தீதும், நன்றும் பிறர்தர வாரா என்பதனை மெய்ப்பிக்கும் வகையில் தீமையை அடிமையினைத்-தமக்குத்தாமே ஏற்படுத்திக்கொண்டு வாழும்(?) மூடரிடை உரிமை வேட்கையை உணர்த்தும் உயர்தனிச் செம்மலே! நண்பரொருவர் உதவியினால் தென்மொழி இதழினைப் படிக்கும் பேறுபெற்றேன்: நும் உணர்வெழுச்சியினையும், நும் கடமையினையும் கண்டு ஆர்த்தெழுகின்றேன். நும் பணிவளர, தென்மொழி காக்கப்பட, என் மனத்தினில் தோன்றும் வழிகளை மெத்தவும் பணிவுடன் படைக்கின்றேன். ஏற்புடையவாயின் மகிழ்கிறேன்.

1. இன்று தமிழகத்தில் மொழியுணர்வு கிளர்ந்தெழுந்துள்ள வேளையில், மொழியின் பெயரைக் கூறிக்கொண்டு குழுகாய நச்சுப், பிண்டங்கள் பல தமிழரிடை, குறிப்பாக மாணவரிடைப் பிளவை உருவாக்கி வருகின்றன. தேசீய மாணவர் தமிழ்வளர்ச்சி (?) என்றும் இன்ன பிறபெயர்களிலும், மாநாடுபோன்றவை நடாத்தி, ஒன்றுபட்டுள்ள தமிழக மாணவரிடைப் பிளவை ஏற்படுத்த முனைகின்றன. உரிமை வேட்கையினையும் மொழியுணர்வையும் இழந்திருக்கின்ற இரக்கத்துக்குரிய மாணவர் பலரைத் தம்பக்கம் பலவழிகளிலும் ஈர்க்கின்றனர். அவற்றிற்குத்தக்க சூட்டுக்கோல் எனும் அளவு தமிழரின் தனித்தன்மை பற்றியும், அவரிடை ஆரியர் கலந்தமை பற்றியும், இற்றைக் கால நிலை பற்றியும் பல கட்டுரை வடித்தல் வேண்டும்.

2. எங்கள் சேரை மாநகர் உட்பட்ட பல இடங்களிலும் தமிழாசிரியர் (!) பலர் தம் வயிற்றினைக் கழுவுமாற்றால், தமிழ்பற்றியும், தமி

முகம் பற்றியும் தப்பான கருத்துகளைக் கூறிவருதல் மூலம் மாணவரி டையில் தமிழன் ஒரு தனியினம் என்பதனையே மறுத்து உரைக்கின்ற னர். இதையல்லாமல் தமிழின் பெயரால் மன்றமமைத்து அதனைப் பார்ப்பனிய பலிபீடமாக்கி அங்கே பார்ப்பனரை யழைத்து உரையாற் றச் செய்து இல்லாத தேசீயத்தினைப் பற்றி, ஏதேதோ உரையாற்றச் செய்கின்றனர். இந்நிலை மாற்றப்பட ஊருக்குஊர் "தமிழ்மன்றம்"! உருவாக்கப்பட்டுக் குறிப்பிட்ட கால அளவிற்கொருமுறை தமிழக விடு தலையின் இன்றியமையாமை பற்றியும், இந்தி வல்லாண்மையின் இன்னல்கள் பற்றியும் உரை நிகழச் செய்தல் வேண்டும்.

3. அண்மைக் காலத்தில் நான் கேட்ட உரை யொன்று 'பாரத தேவி ஆர்த்தெழுந்து நிற்றல் போன்று நம் தேசப்படம் உள்ளது. அதில் காசுமீரம் முடி. உத்தரப்பிரதேச பிராமணர்கள் முகம்போன்ற வர். இருபுறமும் உள்ள இரு கைகள் சத்திரியர்; கால்கள் (தமிழகம்) சூத்திரர்கள் என நம் பழங்கதைகளும், வடமொழி நூற்பாக்களும் கூறுகின்றன. எனவே தமிழர்களாகிய (நாம்(!) பிரிவினைபற்றிப் பேசு தல் 'பாரதமாதா'வின் கால்களை வெட்டிக் கால்மட்டும் தனித்து வாழ் தல் போன்றது" என்பதாகும். இதுபோன்ற பூச்லுரைகள் முறியடிக் கப்படல் வேண்டும். அதைத் "தென்மொழி"யால்தான் செய்யமுடியும்; செய்வீர்களா? அதுவல்லாமல் இந்துச்சமயம்தான் 'பாரததேவி' என் றும் பகர்கின்றனர். அதுமூலம் என்போன்றோரை சமயச் சண்டைக்கு இழுத்து நம்முள் குலப்பிளவை ஏற்படுத்தி மோத விட்டுவிட்டுத் தம் முடைய பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாளுகின்றனர். இவர் தமக்குத் தங்கள் விடை என்ன? விடைமூலம் இவர்தமக்கு வாய்ப்பூட்டு இடு வீர்களா?

4. எவர் எப்படி நம்மைப் பிரிக்க முயன்றாலும் நாங்கள் (பார்ப் பனர் ஏற்படுத்திய குலச் சண்டையினால் குமுகாயத்தில் தீண்டப்படா தவர்களாகவும், தாழ்த்தப்பட்டவர்களாகவும் இன்னல்பட்டு, இந்நிலை யில் இந்துச்சமயம் நீங்கி நிகரமை, உடன் பிறப்பாண்மை தரும் இசு லாமிய சமயத்திற்குச் சென்ற தமிழினத்தவராகிய நாங்கள்) உறுதி யிழக்க மாட்டோம். வேங்கடம் முதல் குமரிவரை பரவிக்கிடக்கும் தமிழ் மறவர் படையின் வலிமையை யுணர்ந்து தமிழ்க்கொடியின்கீழ் ஒன்றுபட்டுப் போராடுவோம். நாம் இந்துவாக இருந்தாலும், இசுலாமி யராக இருந்தாலும், கிறித்தவராக இருந்தாலும் மொழியின் பெயரால் மொழியினைக் காத்திட, மொழியுரிமை பெற்றிட ஒன்றுபடுவோம்.

இறுதியாக ஒன்று! இன்னுயிர் ஈந்தும் "தென்மொழி" காப்போம் இவ்வழியில் தூய்மையான, கலப்பற்ற மொழியுணர்வுடன், எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கம் முழக்கி, எங்கள் அண்ணன், இணையற்ற தமிழ் மறவன், இராசேந்திரனும், தீக் குளித்த செம்மல் சின்னச்சாமி, சிவலிங்கம், அரங்கநாதன் பெயரால் ஆணையிட்டு ஒன்று படுவோம். இந்திக்குச் சாவோலை தீட்டியே தீரு வோம் என உறுதிமொழி எடுப்போம்! வாழ்க தென்மொழி! வாழிய தமிழர்!

சேரன்மாதேவி
நெல்லைமாவட்டம்
25-3-68

இவண்,
இரா. முகம்மது,

அரசுக்கு வேண்டுகோள்!

பேரன்புடையீர்!

வணக்கம் பல. தமிழக முதலமைச்சருக்கும், பொதுப்பணி அமைச் சருக்கும் எம்மன்றம் நிறைவேற்றி அனுப்பிய இரு தீர்மானங்களை இத்துடன் அனுப்பியுள்ளேன். தாங்கள் இத்தீர்மானங்களை வெளியிட் டுத் தமிழகத்திலுள்ள தமிழ் மன்றங்கள் அனைத்தும் தீர்மானங்களை நிறைவேற்றி அரசுக்கு விடுக்குமாறு குறிப்பிடும்படி கேட்டுக் கொள்கி றேன்.

தீர்மானங்கள்:—

(க) உலகத் தமிழ் மாநாட்டில் எஞ்சிய பணத்தில் தமிழ்மொழி யின் சொற்கள் பிறந்து வளர்ந்த முறையை எல்லோரும் உணரும் வகையில் மொழி மூதறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களைக் கொண்டு செந்தமிழின் சொற்பிறப்பியல் அகர முதலி தொகுத்தற்காக அரை இலக்கம் உருபா ஒதுக்கி அப்பணியை விரைவில் தொடங்கு மாறு தமிழக அரசை இம்மன்றம் வேண்டுகிறது.

(உ) மொழி மூதறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் பல சிறந்த ஆராய்ச்சி நூற்களை எழுதி வெளியிட்டு வருகின்றார். பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், தமிழ் வரலாறு, வடமொழி வரலாறு, இசைத் தமிழ்க்கலம்பகம் The language problam of Tamil Nad and its logical solution, The Primary classical

Language of the world ஆகியவை தற்பொழுது வெளிவந்தவை யாகும். இவற்றை அனைத்து உயர்நிலைப்பள்ளி நூலகங்களிலும், கல்லூரிகளிலும், ஊராட்சி' நகராட்சி நூலகங்களிலும் மாவட்டத்தலைமை, கிளை நூலகங்களிலும் வாங்கிவைத்துப் பொதுமக்கள் படித்துப் பயன் பெற அவர் நூற்களை ஒப்புதல் அளித்து (Approved) வாங்கச் சொல்லிக் கட்டளையிடுமாறு தமிழக அரசை இம்மன்றம் வேண்டுகிறது.

நா. இளமுருகன்.
செயலாளர் மறைமலையடிகள் மன்றம்,
புன்செய்ப்புளியம்பட்டி, ஈரோடு வழி.

தமிழரை ஒன்றுகூட்டுக.

பேரன்புச் சான்றீர்! கனிந்த கைகூப்பு; பன்னலமும் பொலிக! தங்களால் வெளியிடப் பெறுகின்ற தென்மொழித் திங்கள் தாளிகையை எங்கே நிறுத்திவிடப் போகின்றீரோ என்று என் உள்ளம் அஞ்சுகின்றது. அருள்கூர்ந்து எவ்விடுக்கண் வரினும் காலங்கடந்தாலும் வெளியிட்டு உதவுங்கள்.

தென்மொழியின் சிறப்பை ஊரெங்கும், நாடெங்கும் உணர்த்தி மிகுதியானோரை வாங்கிக் கற்றுத் தனித்தமிழ் வளம்பெற உதவுமாறு செய்யச் செயலாற்றி வருகின்றோம். எவ்வாறாயினும் திருச்சிமாவட்டம் துறையூரில் கூட்டப்பட விருக்கின்ற தமிழ்ப்புலவர் மாநாட்டின் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்குப் பொருளுதவி செய்திட உறுதி கொண்டுள்ளோம். தென்மொழி, தமிழ்ச்சிட்டு விற்பனை முகவர்களின் முகவரிகளையும், நேயர்களின் முகவரிகளையும் உடனே எனக்கு எழுதி விடுத்திடுங்கள். தென்மொழி, தமிழ்ச்சிட்டு இரண்டிலும் தமிழ் வளர்ச்சியில் நாட்டங்கொண்ட மன்றங்கள், தமிழ்ப் புலவர்கள், கலைஞர்கள், பாவலர்கள், தமிழன்பர்கள் அனைவரையும் (தமிழகம் முழுவதுமுள்ள) என் முகவரியுடன் தொடர்புறுமாறு செய்யுங்கள். (இக்கருத்தினைத் தென்மொழியிலும் தமிழ்ச்சிட்டிலும் வெளியிட்டு உதவுங்கள்)

செ. முத்து அடிகள், அமைப்பாளர், தனித்தமிழ்க்கழகம்,
கோட்டத்தூர் (அஞ்) (வழி) புத்தனும்பட்டி,
திருச்சிமாவட்டம்.

தனித்தமிழ் பகைவர்கள் உணர்க!

ஐயா!

.. எய்ப்பூரகத்து முத்தமிழ் மன்றத்தின் முதலாட்டை விழா கடந்த மேழத் திங்கள் முதலாம் பக்கல் சீருற நிகழ்ந்தது. விழாவில், தனித்தமிழ் அரிமா, செந்தமிழ்த் தந்தை, மொழிநூற் பேரறிஞர் பாவாணர் அவர்கள் பங்கேற்றுச் சிறப்புரையாற்றிச் சிறப்பித்தார்கள். யானும் அவ்விழாவிற் பேசினேன். பேசுங்கால், 'தந்தம்' என்னும் வடசொல்லைத் தென்சொல்லாகவும், 'சுருங்கை,' 'கன்னல்,' 'ஓரை' முதலிய தென் சொற்களைக் கிரேக்கச் சொற்களாகவும் (விளக்கம்: பாவாணரால் எழுதப்பெற்ற பேரா. தெ. பொ, மீ. தமிழுக்கதிகாரியா?—தென்மொழி சுவடி: ௬ ஓலை: ௬) பிதற்றித் திரியும் "தமிழ்ச் சொல் கொல்வேந்து" தெ. பொ மீ. அவர்களின் 'அஃகியகன்ற ஆய்திறனை' எடுத்துக்கூறினேன். இதுகேட்ட ஊரக நண்பர்கள் சிலர் என்னிடம் மல்லுக்கு வந்தனர். அம்மட்டோடு அமையாது, "முத்தமிழ் மன்றப்" போர்வைக்குள்ளிருந்து "தமிழறிஞர்களை இழித்துரைப்பதாகத் தெ. பொ. மீ. அவர்கட்கு முடங்கல் விடுத்ததாகவும் அறிகின்றேன். எதற்கும், எவர்க்கும் அடிமையாகாது தமிழ்த்தொண்டே தம் தொண்டென வாழ்நாள் முழுதும் ஓயாதுழைக்கும் உண்மைத் தமிழறிஞர்தம்மை உணரவியலா நண்பர்களின் அறியாமைக்காகப் பெரிதும் இரங்குகின்றேன்.

மேலும், மடல் விடுத்த நண்பர்களுக்குக் கூறிக் கொள்ளுவேன்: "யாங்களோ அன்றி எமக்கு நல்லாறு காட்டும் தனித்தமிழறிஞர்களோ வெளிப்போர்வை போர்த்துக் கொண்டு எவரையும் எதிர்க்கின்ற அளவிற்கு நெஞ்சுரம் குன்றினோம் அல்லோம். தமிழ்க்குக்கேடுபுரியுநர் எவராயினும், எங்கிருப்பினும், எந்நிலையிலிருப்பினும் அவர்தம் பொய்ம்மையையும், போலிமையையும் வேரோடு களைந்து மெய்ம்மைத் தமிழின் மேன்மையினை வாழ்வோங்கச் செய்பணியில் எள்ளளவும் உள்ளத் தயர்வுறோம். பதவி பெரிதன்று; பகடியர்தம் புகழுரையும் பெரிதன்று; பண்டைப் பைந்தமிழ் மொழியே எமக்குப் பெரிதாம்." இதனை நண்பர்கள் உணர்வார்களாக! உணர்ந்து திருந்துவார்களாக! திருந்தி, எம்மோடிணைந்து செயற்பட்டுச் செந்தமிழ்க்கு சிறப்புச் செய்து, தாமும் சிறப்பார்களாக!

வண்ணஞ்சேர் செய்வினையால் வண்ணத் தமிழ்மொழிக்
கின்னல் வருமாயின் ஏற்போமோ?—முன்னைப்
புகழ்பாடும் வீறும் புறம்பாடி வெற்றி
நகையாடச் செய்வோம் நனி.

திருச்சி—கச
தி. பி. ககூகூகூ. விடை, ச.

அன்பன்,
தி. எழிலரசன்.

இலக்கியம்

நூறாசிரியம்

-துரை-மாணிக்கம்-

பாட்டு: ௪௧

தணந்த சுறவத்து மணந்த மாணிழை
அணந்த சுறவமுன் அகறல் ஆகின்றே!
புணர்ந்த தோளும் பொலிவழிந் திலையே!
நிணந்த மார்பும் நிமிர்பழி கிலையே!
மன்றற் கூறையும் மடிகலைந் திலையே!
கலியெழு கிளைமுன் கவிழ்ந்த புன்றலை
இன்றும் ஏர்ந்தன் றிலையே! எழுதிய
கால்வரிக் கோலமும் கலைந்தன் றிலையே!
சுடரொளி வாணுதல் வெளிறப் பொதிகுழல்
படர்ந்து நிலம்புரள இடை நுடங்கிப்
புறமஞ்சி யுள்ளழுங்கும் புனல்வார் கண்ணொடு
கையற்று ஞெகிழும் கழைமென் றோளிக்கு
உறுநாள் உவப்புற வேண்டி
மறுமணம் புணர்த்திம் மனைவாழ் வோரே!

பொழிப்பு:

நீங்கிய (கடந்த) சுறவ ஓரையில் (தைத்திங்களில்) மணந்த ஞான்றை அணிந்த பெருமை மிக்க அணி (தாலி), வரவிருக்கின்ற சுறவத் திங்களின்முன் அகலும்படி ஆகிற்றே! கணவனால் தழுவப் பெற்ற தோளும் இளமை ஒளி அழியவில்லையே! புடைத்தெழுந்து நின்ற மார்பும் நிலைதாழ வில்லையே! மன்றல் நாளில் உடுத்துக் கொண்ட புதிய உடையின் மடிப்பும் இன்னும் கலையவில்லையே! ஆர

வாரம் எழும்பும் கிளைஞர் தம்முன் மணநாட் போதில் கவிழ்ந்த, பொலிவிழந்த தலை, இன்றும் நிமிர வில்லையே! அன்று காலின்கண் எழுதப்பெற்ற அழகிய கோலமும் இன்னும் கலைந்துபோகவில்லையே! சுடரென ஒளிரும் வளைந்த நெற்றி வெளிறவும், பொதியப்பெற்ற குழல் அவிழ்ந்து நிலத்தே புரளும்படி படர்ந்திருப்பவும், இடை துவளவும், புறத்தே இருப்பார்க்கு அஞ்சியவாறு, அகத்தே மிகுதுயரால் நீர்வழிந்த கண்களோடு செயலற்றும், உடல், உள்ளம், உயிர் தளர்வுறவும் கிடவாநின்ற, இளமூங்கில் போலும் மென்மை வாய்ந்த தோள்களையுடைய இவளுக்கு, இனி, வரவிருக்கின்ற நாள்கள் மகிழ்வுறுமாறு இருத்தலை விரும்பி, மற்றும் ஒருமுறை மணம் செய்வீராக, மனைக்கண் வாழ்தலை மேற்கொண்டு நிற்பீராகிய நீவிரே!

விரிப்பு:

இப்பாடல் புறத்துறையைச் சார்ந்ததாகும்.

மண முடிந்து ஓராண்டிற்குள் கணவனை இழந்த இளம்பெண் ஒருத்திக்கு மறுமணம் புணர்த்துமாறு மனைவாழ்வோருக்குச் சான்றோர் ஒருவர் அறிவுறுத்தியதாக அமைந்ததிப் பாட்டு.

கணவற் றுறந்த நங்கை ஒருத்தியின் இளமைக் கொழிப்பினையும், இல்லறந் தோய்ந்து இளமை நலந்துய்க்கா அவளின் துயர் மண்டிய சூழலையும் எடுத்துக்காட்டி, அவளின் எஞ்சிய வாழ்வின் இன்பத்தை உறுதிப்படுத்திக் குமுகாயத் திருத்தத்தைச் செய்ய வற்புறுத்திக் கூறுவதாகும் இப் பாடல்.

தணந்த சுறவத்து மணந்த மாணிழை: *நீங்கிய சுறவ மாதத்தில் மணஞ் செய்தலாற் பெற்ற பெருமை மிக்க அணி.* தணத்தல்—*நீங்கல், போதல், கடத்தல். தள் என்னும் வேர்ச்சொல்லடியாப் பிறந்த சொல் தணத்தல். (தள்–தள்ளு–தளர்வு–முதலிய சொற்களை ஓர்க) சுறவம் – முதலை–மகரம் (வ, சொ.) தை மாதம். கதிரவன் ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு மீன் கூட்டத்தினிடையே புகுவதாகும் நிகழ்ச்சியின் அடிப்படையாக அமைக்கப் பெற்றன மாதப் பிரிவுகள். மீன் கூட்டம் ஓரை எனப்படும். அவற்றை அடையாளம் கண்டுகொள்ள ஒவ்வோர் உருவத்தினை அக் கூட்டங்களுக்குக் கற்பனையாகப் பொருத்தி வழங்கினர் பண்டைய வானியலார். பின்னை, அவ்வவ் வுருவங்களின் பெயரே அவ்வம் மாதங்களுக்குரிய பெயர்களாக வழங்கின. பண்டைத் தமிழர் மாதங்களின் பெயரை ஓரைப் பெயர்களாகவே*

வழங்கினர் இடையில் வந்த ஆரியர் அத்தூய் தமிழ்ப் பெயர்களை எல்லாம் வடசொற்களாகத் திரித்து வழங்கினர். அரசச் செல்வாக்காலும் சமயப்புனைவுகளாலும் மக்களிடை அவர் பெருமையுற்றபொழுது, அவர் அமைத்த பெயர்களும் பிறவற்றைப்போலவே பெருமையுற்றன. ஆரியர் அமைத்த ஆண்டமைப்பிற்குச் "சௌரமானம்" என்றும், அவர் அமைத்த மாதங்களுக்குச் "சௌரமான மாதங்கள்" என்றும் பெயர் வைத்துக்கொண்டனர். "சௌரம்" என்பது கதிரவனைக் குறிக்கும் வட சொல். கதிரவனின் இயக்கத்தை அடிப்படையாகக்கொண்டு அக் கால அளவை கணிக்கப் பெற்றதாகலின் அஃது அப்பெயர் பெற்றது.

ஓர் ஓரையில் புகுந்த கதிரவன் பிறிதோர் ஓரைக்குப் போகும் வரையில் உள்ள காலம் ஓர் இராசி, அல்லது ஒரு மாதம் எனப் பகுத்தனர். இக் கணக்கீடு பண்டைத் தமிழருடையதே! ஆரியர் இடம் மாறிகளாக இருந்தமையான் அவர்களுக்கு நிலையான வானியலறிவு குறைவாக இருந்தது. தமிழரின் இவ் வானியல் அடிப்படையில் அவர் திரித்த வடமொழிப் பெயர்களே பிற்காலத்து நிலைபெற்றுப் போனமையாலும் பண்டைத் தமிழரின் மூலநூற்கள் யாவும் அழிந்தும், அழிக்கவும் பட்டமையாலும் அவர் வழக்கே நிலைத்தது குறித்து, தமிழர்க்கு வானியலறிவே குறையெனமொழிவர் மதிக்குறைவினர் சிலர். அவர் தருக்குறைகள் கதிர்முன் பனிபோல் உருக்குலைந்து போங்காலம் மிகத் தொலைவில் இல்லையென உணர்க.

இனி, ஒவ்வோர் ஓரைப் பெயராலும் அழைக்கப்பெற்ற மாதப் பெயர்கள் சைத்திரம், வைசாகம் , ஆஹரம் (ஆனி), ஆஷாடம் (ஆடி) முதலியன. இவ்வழக்கு தமிழரின் ஓரைப் பெயர் வழக்கை அடியொட்டியன. (விரிவைக் கணியநூலிற் கண்டுகொள்க)

இனி, தலைமை மீனின் பெயரே அந்த மீன் சார்ந்த கூட்டத்திற்கும் வழங்கப் பெற்றது. வெள்ளாடு போல் அமைந்த மீன் கூட்டத்திற்கு மேஷம் என்றும், ஆணும் பெண்ணும் இணைந்த இரட்டைத் (மிதுனம்) தோற்றம்போல் உள்ளதற்கு மிதுனம் என்றும், நண்டு, மடங்கல் (சிங்கம்), கன்னி, துலை (தராசு), நளி (தேள்), சிலை (வில்) சுறவம் (முதலை), கும்பம் (குடம்), மீன் ஆகியன போல் அமைந்தவற்றிற்கு, முறையே கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம் (தேள்), தனுசு (வில்),மகரம் (முதலை), கும்பம், மீனம் என்றும் வழங்கி

னர். இவ் வழக்கில் கடகம், கன்னி, துலாம். கும்பம், மீனம் என்பன தூய தனித்தமிழ்ச் சொற்கள். இவ்வாரிய வழக்கு தலையெடுத்தபின் ஓரைப் பெயரால் மாதங்களைக் குறிக்கும் தமிழ் வழக்கு தலை மறைக்கப் பெற்றது.

இனி, சித்திரை, வைகாசி என்று தொடரும் வடநூல் வழக்கிற் கான, தூய தமிழ்ப்பெயர் வழக்கு மேழம், விடை, இரட்டை அல்லது **ஆடவை, கடகம், மடங்கல், கன்னி, துலாம், நளி, சிலை. சுறவம், கும்பம், மீனம் என்பன.**

எனவே சுறவத் திங்கள் இக்கால் ஆரிய வழக்குப் பெயரான தைமாதத்தைக் குறிக்கும் தூய தனித்தமிழ்ச் சொல்லும் வழக்கு மெனக் கொள்க.

மாணிழை: பெருமைக்குரிய அணி. இழைக்கப் பெறுவதால் அணி இழையெனப்பட்டது. 'இழைத்தல்–ஆராய்தல், கலப்பித்தல். சீவல், பொடியாக்குதல், செதுக்குதல், செய்தல், அழுத்துதல், மணி பதித்தல் ஆய பொன்செய் வினைகள் அத்தனையும் குறிக்குமோர் அருஞ்சொல். இத்தனை வினைப்பாடுகளும் கொள்ளலால் பொன்னால் செய்யப்பெறும் அணிக்கு இழையென்று பெயர் வந்தது. இழை அணி வோரையன்றி அதனைச் செய்வோரை இழையோர் என்றல் மரபாகாது; வளை அணிவோரை அன்றி அதனைச் செய்வோரை வளையோர் என்று குறிக்காமை போல.

இனி, செய்யப்பெறும் அல்லது அணியப்பெறும் அணிகளுள் தாலி ஒன்றே மங்கலச்சிறப்பு வாய்ந்ததாகலின் அது மாணிழை எனப் பெறும் தகுதி வாய்ந்தது. மணக்கப் பெற்ற காலத்து அணியப்பெற்ற தாகலின் மணந்த மாணிழை எனப்பெற்றது.

அணந்த சுறவமுன் அகறல் ஆகின்றே; நெருங்கிவரும் சுறவத் திங்களுக்கு முன் அகலுதல் ஆகிற்று.

அணத்தல்–நெருங்குதல்–மேலாகி நிற்றல் (அண்–என்னும் சொன் மூலஅடியாக பிறந்த சொல்–வேர்–அள். (அண்–அண்ணு–அண்டு–அண்டை–அடு–அண்–அணை போன்றவற்றை ஓர்க)

அகறல்: அகலுதல்—நீங்குதல். அகலம் என்னும்சொல் பரப்பைக் குறித்தபின், இரண்டு பொருள் அகலுமிடத்துப் பிரிவு தோன்றலால் அகலுதல் என்னும் சொற்கு நீங்குதல், விலகுதல் என்னும் பிரிவுப் பொருள் தோன்றிற்றெனக.

ஆகின்றது—ஆகிற்று என்பதன் மெலித்தல் வேறுபாடு-வேறு படல்-விகாரித்தல் (வ. சொ.)

புணர்ந்த தோள்: புணரப்பெற்ற தோள்-தழுவப்பெற்ற தோள்.

பொலிவு: இளமை ஒளி. பொன்-பொல்-பொலம்-பொலிவு. மண வாத இளமையோர்க்கு உடலின்கண் உள்ள பொன்போன்றதொருமினு மினுப்பு. மணஞ்செய்து கொண்டார்க்கு இவ்வொளி மழுங்கித்தோன்று மாம். திருமணம் செய்விக்கப் பெற்றும் இவ்விளையோளின் பொலிவு குன்றுதிருப்பதை எடுத்துக்காட்டி, இவள் இல்லற இன்பத்தை நிறை வுறத்துய்த்தோள் அல்லள் எனக் குறிப்பிக்கக் கூறப்பெற்றது.

நிணந்த மார்பு: புடைத்து விம்மலுற்ற மார்பகம். நிணம்—கொழுப்பு—மதர்ப்பு. நிரைத்தல் கட்டப்படுதலுமாம்.

நிமிர்பு: நிலை நிற்கும் தன்மை. அழிகிலை: அழிதல் இல்லை. பெண்டிர்க்குத் தோளும் மார்புமே இளமைக்கும் முதுமைக்கும் வேறு பாடு தோற்றுவிக்கும் கருவிகளாக விருக்கின்றமையின், இளமை அழியா இளையோள் என்று காட்டுவான் வேண்டி அவ்வுறுப்புகளின் நலனழியாமை கூறப்பெற்றது.

மன்றற் கூறையும் மடிகலைந்திலையே: மணத்திற்காக உடுத்தப் பெற்ற புதுச்சீரை. மணத்தின்பின் மீண்டும் மடிக்கப் பெற்று மங்கலப் பொருளாகப் பேணிக் காக்கப் பெறுமாகலின், அது மடிக்கப் பெற்றநிலையிலேயே உள்ளதென்றும், பிறிதொருகால் உடுத்தப்பெறும் வாய்ப்பையும் பெறவில்லை என்றும் குறிக்கலாயிற்று. இனி அதனை என்றும் உடுத்தக்கூடாத தன்மையில் மங்கலம் இழந்தாள் என்று இரக்கந் தோன்றக் கூறியதுமாம்.

கலியெழு கிளைமுன் கவிழ்ந்த புன்றலை: ஆரவாரத்தை எழுப்பு கின்ற கிளைஞர்முன் நாணத்தால் கவிழ்ந்த தலை. மணநாட் பொழுதில் நாணத்தால் கவிழப்பெற்ற தலை, ஈண்டுத் துயரால் கவிழப் பெற்றது.

குறிக்கப் பெற்றது. புனையப்பெற்ற தலையாக இல்லாமல் புனைவில்லா வெறுந்தலையாக இருந்தலை ஈண்டுக் குறித்திடப் புன்றலை எனப்பெற்றது. புன்றலை–புல்லியதலை புல்லிது–புன்மையானது – இழிந்தது–எளிமை தோற்றும் இழிசொல். புல்போலும் எளிமையும் இழிவுமாம். தலைபுனைவில்லாமை–நெய்யில்லாது வறளலும், வாராது பரத்தலும், மலரில்லாது எழில்பெருமையும் ஆம்.

இன்னும் ஏர்ந்தன்றிலையே: அன்று கவிழ்ந்த தலை இன்றுவரை நிமிர்த்தப்பெற்றது இல்லையே! ஏர்தல்–எழுதல். ஏ–எழுச்சியைக்குறிக்கும் ஒரு முதனிலை.–மேல்நோக்கி நின்ற எல்லாப் பொருள் குறித்த சொற்களுக்கும் ஏ சொல்முதலாக நிற்பதை உன்னுக. (எ–டு) ஏர்-ஏண்–ஏணி-ஏறு-ஏற்றம்–ஏக்கழுத்தம்–ஏந்தல்–ஏமாப்பு–ஏவல் (மேற் செலுத்துதல்)–ஏவுதல்-ஏனாதி (சேனைத்தலைவன்)–ஏ–எ,எட்டம்-எட்டுதல் (உயர்ச்சிக்குத் தாவுதல்); ஏ–சே–சேண் – சேய்மை–செலவு (மேற்செல்லுதல்)–சேடு (உயர்ச்சி, பெருமை)–சேட்டன் (மூத்தவன், தனக்கு மேலானவன், முதல்வன்) சேட்டி (மூத்தவள், தமக்கை) [தோழியைக் குறிக்கும் "சேடி" என்ற வழக்குச் சொல் முதுமைப் பொருள் குறித்த தூய தனித்தமிழ்ச் சொல்லே. தலைவிக்குத் தோழியாக இருப்பவள் மூத்தாளாக இருந்து வழிகாட்டுதல் பண்டைய வழக்கம்] (இதன் விரிவைப் பாவாணரின் முதல்தாய்மொழியில் காண்க.)

எழுதிய கால்வரிக் கோலமுங் கலந்தன்றிலையே: திருமண நாளில் அழகுக்காக இவள் காலின்கண் செம்பஞ்சுக் குழையாலும், பவளக்குறிஞ்சிச் சாற்றாலும் எழுதப்பெற்ற கோலமும் இன்னும் அழிந்தபாடில்லை என்பது. பவளக்குறிஞ்சி–மருதோன்றி. மணம் செய்விக்கப்பெற்று இன்னும் நெடுநாளாகிவிட வில்லை என்ற குறிப்புத் தோன்றக் கூறியது. கோலுதல் -கோலம். கோலுதல்–வரைதல்–எழுதுதல்–சூழச் செய்தல்–வளைதல் முதலிய பொருள்களைக் குறிக்கும்.

வாணுதல் வெளிற: வாள் + நுதல் என்று பிரிபடும். வாள் நுதல்–ஒளிபொருந்திய நெற்றி. வாள்–வளைந்த என்றும் பொருள்பட்டு வளைந்த நெற்றி என்றும் கொளப்பெறும். சுடரொளி என்று முன்னரே அடை பெற்றமையான் வளைந்த என்று கொள்வதே சிறப்பாம். துயர்மேலீட்டால் நெற்றி வெளிறிப்போதலால் 'வெளிற' எனப்பட்டது.

பொதிகுழல் படர்ந்து நிலம்புரள: அடர்ந்த குழல் என்றும், முன்னர் பொதிந்து வைக்கப்பெற்ற குழல் என்றும் பொருள்படும்.

பொதிதல்-மிடைதல்-பிணித்தல்- உள்ளடக்குதல். முன்னர் பொதியப் பெற்ற குழல் இக்கால் தளையவிழ்ந்து படர்ந்து நிலம் புரண்டு கிடத்தல்-என்பது. குழல் நிலம் புரளுதலால் இவள் தரையில் படுத்துக் கிடந்தனள் என்றபடி.

இடைநுடங்குதல்: இடை துவளுதல். துயர் மீக்கூர்தலால் செயலற்றுப் போதல்.

புறம் அஞ்சி உள்ளழுங்கும்: புறத்தே உள்ளோர்க்கு அஞ்சி உள்ளத்திற்குள்ளேயே குமைதல். சில நாட்களே கணவனொடு வாழப் பெற்றும், அவனை மறத்தற்கியலா துயரம் பெற்றது பிறர் எள்ளற் குரியதாகலின், அவர்தம் எள்ளலுக்கு அஞ்சுதலால் உள்ளத்தே வருந்தினுள் என்பதுமாம்.

புனல் வார் கண்: நீர்வழிந்த கண்.

கையறுதல்: செயலற்றுப் போதல்.

கழைமென் தோளி: இள மூங்கிலை ஒத்த மென்மையான தோள்களை உடையவள்.

உறுநாள்: இனி வருதலுற்ற நாள். எதிர்உறும் நாள்.

மறுமணம்: மீட்டும் ஒரு மணம். புணர்த்தீம்-புணர்த்துவீர்-செய்வீர் என்றபடி.

மனைவாழ்வோர்: மனைக்கண் வாழ்தலை மேற்கொண்டு விளங்குவோர்.

நீவிர் எல்லாரும் மனைக்கண் வாழ்தலை மேற்கண்டொழுக, இவ் விளையாள் மட்டும் நும்மொடு இருந்து கொண்டே வாழாமை மேற்கொண்டு கைப்மை நோற்றல் பொருந்தாது என்றபடி.

கழி இளமைப் பருவத்தே கணவனை இழந்தாள் ஆகையால் இவள் மணமின்றி, இல்லற இன்ப நுகர்ச்சி துறந்து வாழல் பொருந்தாது என்று கூறி; இவளுக்கு மேலும் மணம் செய்வித்தல் வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியதாம் இது. கணவனை இழந்தார் இளம்பருவத்தினரேனும் கைம்மை நோற்றல் வேண்டும் என்ற ஆரிய வழக்கை அழித்துக் கூறியதாம் இக் கூற்று. இவள் இங்ஙனமே மணமின்றி வாழுதல் இயற்கைக்கும், உடலியலுக்கும் மாறுபட்டதாம் என்று வலியுறுத்தியதாகும் இப்பாடல்.

இது பொதுவியல் என் திணையும், முதுபாலை என் துறையுமாம்.

தமிழுக்கா சொற்கள் இல்லை?

சொற்சுருக்கம் இல்லையாம் சொந்தத் தமிழுக்கு!
சொற்சுருங்கச் சொல்லுவதற்(கு) ஆங்கிலமாம்!-சிற்சில
கல்லூரி மூடர் கதைக்கின்றார் ஏர்தமிழ்ச்
சொல்லூரில் சோம்பிப் புகாது.

சொற்சுருக்கம் இல்லென்பார் சொற்சுருக்கும் ஆங்கிலத்தில்
சொற்சுருக்கிப் பார்க்கட்டும் இக்குறளை!—கற்க:
"முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோள் அவட்கு"

'அவனா இவன்? என்ப(து) ஆங்கிலத்தில் செல்லின்
கவையாகி நீண்டிடுதல் காண்க!—'அவனே!'
எனுஞ்சொல்லை எங்ஙன் சுருக்குவீர்? ஏஏ!
இனுஞ்சொல்ல வோசான்(று) எடுத்து.

முன்னைத் தமிழ்நூல்கள் முற்றும் படியாமல்
இன்ன படியிருப்பார் ஏதறிவார்?-துன்னி
துடிக்கின்ற(து) உள்ளம்! துடுக்கர்வாய்ச் சொல்லால்
கடிக்கின்ற(து) இங்கிதழைப் பல்

ஏதும் முடியா இழிகடையர் தாம்தம்மைப்
பேதைப் படுத்துகின்றார் பீடற்றார்—மோதும்
தமிழுணர்வு இல்லாத் தடிநாக்கர் தாழ்ந்த
உமிழுணவே நச்சுகின்றார் சீ!

ஆழத் தமிழ்க்கடலில் ஆழ்ந்து மணிக்குலத்தை
வாழக் கொடுக்காது வாய்வீச்சால்—நாளைக்
கழிக்கின்றார் மேனி சிலிர்க்காது! தாயைப்
பழிக்கின்றார் என்ன அவர் பண்பு!

புதூர்-த. அன்பழகன்.

வடவேங்கடம்

க. ப. அறவாணன், மு. க; கீ. க. தே. பாளையங்கோட்டை.

'வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம்'

எனப் பனம்பாரனாரின் பாயிரம் தொல்காப்பியர் கால மொழி வழங்கிய எல்லையைக் குறிக்கிறது. இவ்வெல்லையே தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் உரிய எல்லை என்ற கருத்தில் காக்கைபாடினியார், சிகண்டியாசிரியர், இளங்கோவடிகள், கம்பர், சிவப்பிரகாசர், பாரதியார் ஆகியோரும் பாடியுள்ளனர்.[1]. பாயிரத்தில் குறிக்கப்படும் வட எல்லை இன்றுள்ள திருப்பதிமலை என்பது பலரது கருத்து. தொல்காப்பியர் இத் திருப்பதி மலையைத்தான் வடஎல்லையாகக் கொண்டாரா என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

வேங்கடத்தின் இயற்கை அமைப்பு:- தரை மட்டத்திலிருந்து 1000-2500 அடி உயரம் உள்ள திருப்பதி மலையும், அதனைச் சார்ந்த குன்றுகளும். இம்மலை பற்றியும், மலை சூழ்ந்த தொடர்ச்சி பற்றியும் பழம் புலவர்கள் கூறுஞ் செய்திகள் கருதத்தக்கன. பாயிரத்தில் வடவேங்கடம் எனக் குறிக்கப்பட்டது தவிர, தொல்காப்பிய நூலுள் அம்மலையைப் பற்றிய பிற குறிப்புகள் ஏதும் இல்லை. ஆனால் தொல்காப்பியர்க்குப் பின்வந்த கழக இலக்கியப் புலவர்கள் வேங்கடத்தைப் பற்றி மிகுந்த செய்திகள் கொடுத்துள்ளனர். அவருள் மாமூலனார், கல்லாடனார், மதுரைக் கணக்காயனார், அவர் மகனார் நக்கீரனார், காட்டூர் கிழார் மகனார் கண்ணனார், தாயன் கண்ணனார், நன்னாகனார், கள்ளில் ஆத்திரையனார் ஆகியோர் குறிப்பிடத் தக்கோராவர். அவர் கூறிய செய்திகளை ஈண்டுத் தொகுத்து நினைத்தல் பின் நிகழும் ஆராய்ச்சிக்குத் துணைபுரியும்.

வேங்கடம் குறிஞ்சியும் முல்லையும் மயங்கிய இடமாகையால் அங்கே யானைகள் நிறைய இருந்தன. 'வடவயின் வேங்கடம் பயந்த வெண்கோட்டு யானை' எனவரும் அகநானூற்றுப் பாடலாலும்

---

[1] காக்கை பாடினியம், சிவப்பிரகாசர், சிகண்டியார்-சிலம்பு அடியார்க்கு நல்லார் உரை.

இளங்கோவடிகள்–சிலம்பு வேனிற்காதை 1-2, கம்பர், நாடவிட்ட படலம்-29, பாரதியார்–செந்தமிழ்நாடு-5.

(அகம் 27), பிறபாடல்களாலும் (அகம், 61, 85, 211, 213, 265 369, நற்றிணை; 14, புறநானூறு 389) இச்செய்தி உணரப்படுகின்றது. மற்றும் வேங்கைமரம் (அகம்; 85, 141), நரந்தை என்னும் நாரத்தைமரம் (அகம்; 141) மராமரம் (அகம்; 211, 265), காந்தள் (நற்; 14), குருந்து (அகம்; 85) மயில் (அகம். 85) முசுக்கலை (அகம்; 141), கோவலர் (அகம்; 311, 393) ஆ (அகம்; 393), தேன் (அகம்; 318) முதலிய வளங்கள் இருந்தன. வேங்கடத்தில் அருவி ஒழுகியது என்பதை 'ஒலி வெள்ளருவி வேங்கடம்' (புறம், 381, 389, அகம்; 213, 359) என்ற வரி உணர்த்துகிறது. அம்மலையிடத்து மூங்கில்கள் செறிந்திருந்தன என்பதை, 'காம்புடை நெடுவரை வேங்கடம்' எனவரும் புறநானூற்றுப் பாட்டால் (புறம்; 385) அறிகிறோம். அங்கே குளிர்ந்த சோலைகள் பல இருந்தன என்பதை 'பனிபடு சோலை வேங்கடம்' எனவரும் மாமூலனார் பாட்டுணர்த்துகிறது (அகம்; 211),

வேங்கட வரை:- வேங்கட மலையைப்பற்றிக் குறிப்பிட்டுக் காட்டும் கழகப் பாடல்கள், வேங்கடமலை என்று சுட்டுவதைக் காட்டிலும் வேங்கடவரை என்றே பெரும்பாலும் சுட்டுகின்றன. இது ஆராயத் தக்கது.

'தேங்கமழ் நெடுவரைப் பிறங்கிய வேங்கடம்! (அகம்; 141)
தேன் தூங்கு உயர்வரை நன்னாடு (அகம் 393)
நெடுவரை வேங்கடம் (அகம; 209)
வேங்கட நெடுவரை (அகம்; 85)
வேங்கட விறல்வரை (புறம்; 385)
நெடுங்கோட்டு வேங்கடம் (அகம், 213)

மேற்கண்ட இலக்கியச் சான்றுகளில் இறுதிச் சான்று தவிர ஏனையன வரை ஒன்றைக் குறிப்பிடுகின்றன. வரை என்பதற்கு நேர்பொருள் கீற்று அல்லது வரி என்பதாம். மலையை வரை என்ற சொல் ஆகுபெயராய் நின்று உணர்த்துகின்றது. வரிபோல் நெடுக நீண்டு நிற்கும் மலைத்தொடர்ச்சி என்பதேகருத்தாகல் வேண்டும். கழகப்புலவர்கள் உள்ளது உள்ளபடியே புனையும் இயற்கைக் கலைஞர்கள். ஆதலின் வரை என்ற சொல்லும், நெடுவரை என்ற தொடரும் நீண்டுதொடர்ந்து நிற்கும் மலைத் தொடரையே உணர்த்துதல் வேண்டும். 'வேங்கட நெடுவரை' என்று குறிக்கப் பட்டிருத்தலால், மேலைக் கடலின் எல்லை தொடங்கி, கீழைக்கடல் எல்லை வரையில் தொடர்ந்து நிற்கும் மலைத்

தொடரையே 'வேங்கடம்' எனக் குறித்தனராதல் வேண்டும். மலைக் குவியலாய் ஓரிடத்து நிற்கும் திருப்பதி மலையை, வேங்கடம் என்ற சொல் குறிக்க வாய்ப்பில்லை. வடவேங்கடம் என்பதற்கு நச்சினார்க் கினியர், ''நிலங்கடந்த நெடுமுடி அண்ணலை நோக்கி உலகம் தவஞ் செய்து வீடுபெற்ற மலையாதலானும், எல்லாரானும் அறியப் படுத லானும் வேங்கடத்தை எல்லையாகக் கூறினார்'' [2]. எனறுரைப்பர். நச்சினார்க் கினியர் குறிக்கும் பழங்கதை மிகப் பிற்காலத்தது. பிற் காலக் கதையைத் தொல்காப்பியப் பாயிர ஆசிரியர் அறிந்திருந்தார் அறிந்துரைத்தார் என்பது பொருந்தவில்லை. மேலும் வேங்கடம் அனை வராலும் அறியப்படும் திருநிலமானது எப்போது?

திருப்பதி என்னும் வேங்கடம் புகழ் எய்தியது பிற்காலமே:—

கி. பி. பதினொன்றும் நூற்றாண்டு வரை, வேங்கடக் கடவுள் சைவ, வைணவப் பொதுக் கடவுளாகவே விளங்கி இருக்கிறார்.

முதலாழ்வார்களான பொய்கையாழ்வாரும், பூதத்தாழ்வாரும் பாடிய பாடல்கள் இதனை உறுதி செய்கின்றன.

தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழ் அரவும் பொன்னாணும் தோன்றுமால் - சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து

(இயற்பா. மூன்றாந் திருவந்தாதி. 63)

என்ற ஆழ்வார் பாடல் திருப்பதி வேங்கடவன் தாழ் சடையையும் பாம்பையும் மழுப் படையையும் கொண்டிருந்ததாகக் குறிக்கிறது. இவை சிவனுக்குரியன. திருப்பதியில் உள்ள இறைப் படிமத்தைச் சிவனுக்கும், மாலுக்கும் சார்த்திக் கூறும் பிறபாடல் களும் உள்ளன.[3] திருப்பதிப் படிமம் முருகனே என்றும், பின்னர்தான் இராமானுசர் அந்தப் படிமத்தைச் சங்கு ஆழி ஏந்த வைத்துத் திருமாலாக மாற்றி

2 தொல்காப்பியம், பாயிர உரை. நச்சினார்க்கினியா பேரா. கு. சுந் தரமூர்த்தி பதிப்பு. பக். 7.

3 பொய்கையாழ்வார்; 5, 28, 74, 38, பேயாழ்வார்-61, 62, 68 ஆகியன பார்க்க.

விட்டார் என்ற கருத்தும் உண்டு.[4], மிகப் பிற்காலத்தவரான கபில தேவர் என்ற சைவ சமயத்தாரும் வேங்கடமலையானைப் பாடியிருக்கிறார்.[5]. வேங்கடவரின் படிமத்தை ஆராய்ந்த தற்காலப் படிமஇயல் வல்லாரும், வேங்கடவன் சைவ அடையாளங்களோடு இருப்பதை உறுதி செய்கின்றனர். ஆதலின் வேங்கடம் வைணவத் திருப்பதியாகப் புகழ் பெற்ற காலம் மிகப் பிற்காலமே.

சிலப்பதிகாரத்தில் மாடலமறையோன் கூற்றுகத் திருப்பதி மலையானின் திருமால் கோலம் பேசப்படுகிறது.

'வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலையத்து உச்சி மீமிசை
....
செங்கண் நெடியோன் நின்ற வண்ணம்
(காடுகாண் காதை. 41-51)

எனவரும் பகுதி கழகக் காலத்திலேயே வேங்கடமலையின் சிறப்பையும் அதில் உறைந்திருந்தவன் திருமால் என்பதையும் காட்டவில்லையா என்று சிலர் தடை யெழுப்பக்கூடும்.

கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் முதலாழ்வார் காலத்தும், அதற்கும் பின்பு கபிலதேவர் காலம் வரை, திருப்பதி இறைவன், சைவ, வைணவக் கலப்புக் கடவுளாகக் காட்டப்பட்டிருக்கிறான் என்பது முன்னே நிறுவப்பட்டது. இச்செய்தி தற்காலப்படிம நூலாராலும் உறுதிப்படுத்தப்பட்டது என்பதும் காட்டப்பட்டது. அங்ஙனமிருக்க இளங்கோவடிகள் காலத்து மட்டும், இம்மலை எங்ஙனந் திருமால் ஒருவரையே பெற்ற இடமாக இருந்திருக்க முடியும்? ஆதலின் "வீங்குநீர் அருவி... நின்ற வண்ணம்' வரை உள்ள பதினொரு வரிகளும், பிற்கால வைணவ அடியாரின் இடைச் செருகலாய் இருத்தல் கூடும் என்று அறிஞர் கருதுகின்றனர்.[6]. அவ்வாறு கொள்ளாமல் அப்பகுதியைச் சான்றாகக் கொண்டாலும், சிலப்பதிக்காரக் காலம், தொல்காப்பியர் காலத்திற்கு

4 சிவஞான முனிவர், தொல்காப்பியப் பாயிர விருத்தி. நாவலர் பதிப்பு. பக். 4.

தொ. மு. பாசுகரத்தொண்டைமான். வேங்கடம் முதல் குமரி வரை. பக். 11.

5 பன்னிரு திருமுறை; வருவந்தாதி-15.

6 Tamil Culture. Vol. IX No. 1. Jam, Mar. 1961. PP. 71-74.

மிகப் பிற்பட்ட காலமாகும், சமயக் களைன் பூளைத்துச் செழித்த காலம் சிலம்பு-மணிமேகலை காலமாகும். தொல்காப்பியர் காலமோ சமயக் களையே பூளைவிடாத காலமாகும்.

வேறுசிலர் ''விழவுடை விழுச்சீர் வேங்கடம்'' என்று அகநானூறு (அகம்-61) குறிப்பிடுகின்றதே. கழக இலக்கியத்திலேயே வேங்கடத்தில் கொண்டாடப்பட்ட விழாக்கள் குறிக்கப்படுவதால், அம்மலையின் தொன்மையும், சீர்மையும் துலங்கவில்லையா என வினவுவர்.[7]. திருப்பதி என்னும் திருமலையில் மட்டுந்தான் சிறப்புடை விழா நடக்கிறது என்பது போல இக்கருத்து அமைந்துள்ளது. ஆனல் விழாக்கள் பண்டைத் தமிழக ஊர்களில் நடக்கும் பொதுவான நிகழ்ச்சிகளே என்பது கழக இலக்கியச் செய்திகளால் புலனுகின்றது.

சாறு அயர் மூதூர் (பட்டினப்பாலை 215)
சாறு அய்ர் மூதூர் (சிறுபாணாற்றுப்படை 206)
அழியா விழவின் அஞ்சுவரு மூதூர் (அகநானூறு 215)
விழவு அகலூங்கட் சீறூர் (புறம், 65)
மாடந் தோறும் மைவிடை வீழ்ப்ப நீயாங்குக்
கொண்ட விழவினும் பலவே (புறம்; 33)
மடியா விழவின் பாணர் நன்னுட்டு (புறப் 212)

மேற்கண்ட இலக்கியச் சான்றுகள் ஊர்களில் விழா நடப்பது பொதுவான நிகழ்ச்சி என்பதையும், அது கடவுள் விழாவாகத்தான் இருக்க வேண்டும் என்று உறுதிப்பாடு இல்லை என்பதையும் தெளிவு படுத்துகின்றன. ஆதலின் திருப்பதி என்பதால் 'வடவேங்கடம்" என்று வடதிசையை-மங்கலதிசையை முதற்கண் கூறினுர் என்னும் நச்சினுர்க்கினியர் கருத்து பொருத்தமற்றதாகிறது.

வேங்கடம் பெயர்க்காரணம்:-

வேங்கடமலை என்று குறிக்காமல் வேங்கடவரை எனக் குறித்ததாலும், திருப்பதி என்னும் வேங்கடம் புகழ்பெற்றது பிற்காலமே என்பதாலும், விழா நிகழ்ச்சிகள் வேங்கடமலைக்கே உரிய சிறப்பு நிகழ்ச்சிகள் அல்ல என்பதாலும், தொல்காப்பியம் பாயிரத்தில் வரும் வடவேங்கடம் என்பது தற்போதைய திருப்பதியைக் குறிக்கவில்லை

7 Dr. M. A. Dorai Rangaswami, Vadavengadam. Annals of Oriental Research, Vol. Xv III. Part. II. 1963; P. 16.

என்பது தெளிவு. மாறாக 'வேங்கடம்' என்று பெயர் பெற்றதன் காரணத்தை ஆராய்தல் வேண்டும்.

(அ) வேங்கடம் என்பதற்குத் தன்னை அடைந்தவர்களுடைய கரிசுகளை எல்லாம் போக்குவது என்பது ஒரு பொருள்.

(ஆ) வேம்-அழிவின்மை, கடம்-செல்வம் எனப் பகுத்துக் கொண்டு, தன்னை அடைந்தவர்கட்கு அழிவில்லாத செல்வத்தைக் கொடுப்பது என்பது பிறிதொரு விளக்கம்.[8]

சமய உணர்வை மூலமாகக் கொண்டு கூறப்பட்ட பெயர்க்காரணங்கள் இவை. கழகக் காலத்தில் வேங்கடம் சமயச்சிறப்பு பெற்றிருக்கவில்லை என நிறுவப்பட்டதால் இக்காரணங்கள் ஏற்பதற் குரியன அல்ல.

(இ) 'காம்புடை நெடுவரை வேங்கடம்' (புறம்; 385) (காம்பு-மூங்கில்) என்று வருவதால் 'வேய்' என்னும் மூங்கிலைக் கொண்ட கடத்தற்கரிய காடடர்ந்தியங்கிய காரணத்தான் வேய்+கடம்-வேய்ங் கடம் வேங்கடம் என்று ஆயிற்று என்பர்.

(ஈ) வேங்கை மரங்களை நிரம்பக் கொண்டிருந்த காடாக இருந் ததால் வேங்கை + கடம்-வேங்கடம் என்றாயிற்று என்பர்.

(உ) வடக்கில் இருந்த மொழிபெயர் தேயங்களை அடைதற்கு விழவுடை விழுச்சீர் வேங்கடமே கடத்தற்கினிய காடாக இருந்ததால் அது வெம்(விரும்பும்) + கடம் = வெங்கடம் = வேங்கடம் எனவாயிற்று என்பர்.

(ஊ) கொடிய காடு எனும் பொருளில் வெம் (கொடுமை)+ கடம் = வெங்கடம் = வேங்கடம் என்றாயிருத்தல் கூடும் என்பர்.[9]

இக்கருத்துகள் ஓரளவு பொருத்தமுடையன வாயினும் வேங்கட மலைத் தொடர்ச்சியின் இயற்கை அமைப்பைக் கொண்டே அதன் பெயரை ஆராய்தல் வேண்டும். அதுவே தக்கது.

8 B. R, Purushothaman Naidu, Thiru Vengadam Annals & Oriental Research Vol. XVI. 1959-60 Part. I. P. I.

9 Annals of Orieutal Research Vol XVIII Part. II. 1963. P. 53, 54.

கழக இலக்கியத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்து திணைக்குட்பட்ட பாடல்களும் உள்ளன. தொல்காப்பியர் பாலைத்திணையை:

'நடுவண் ஐந்திணை நடுவணது' (தொல். அகத்திணை. 2) என்று குறிப்பார். அகத்திணைப் பனுவல்களில் பாலைப் பாடல்களே பெரும்பான்மை. பண்டைத் தமிழர் பொருள் தொகுப்பதற்காக வேண்டி, மணம் முடித்த தலைவியரை விட்டுப் பிரிந்து செல்வதும், வழியில் பாலைநிலத்தின் வெம்மையால் அவலமுறுவதும், அதனை எண்ணித் தலைவி துயரமுறுவதும் கழகப் பாடல்களில் காட்டப் பெறுகின்றன. அப்பாடல்கள் குறிக்கும் பாலைநிலம் தமிழகத்து யாண்டு இருந்தது என்பதும் ஆராய்ச்சிக்குரிய தன்றோ? தமிழகத்தில் சகாரா போன்ற நிலைத்த பாலை நிலங்கள் இல்லை எனினும் முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்த பாலைநிலம் இருந்திருத்தல் வேண்டும். தமிழ் நாட்டில் நிலத்தாற் பாலை இலதேனும், காலத்தாற் பாலையுண்டு. நிலையான சுரம் இன்றேனும் வந்து போம் சுரம் உண்டு. கோடை என்னும் காலப்பாலை குறிஞ்சி முல்லைப் பகுதிகளை ஒரிரு திங்கள் நீரற்ற களமாக, வெப்பம் வீசும் சுரமாக, யாதுந் தோன்றாப் பாலைநிலமாக, கடுங்கதிர் ஞாயிற்றின் விருந்தில்லமாக மாற்றி விடுகின்றது. இரண்டு திங்கட் பாலையேயாயினும், இது விளைக்கும் வெம்மைக்கு அளவின்று, என்று தமிழ்நாட்டுப் பாலை நிலம் பற்றி, பா், வ. சுப. மாணிக்கம் குறிப்பிடுவதும் ஈண்டு எண்ணத் தகுந்தது.[10]. கழகப் பாடல்கள் காட்சிப் படுத்தும் கொடிய பாலை, சேர, சோழ பாண்டிய நாடுகளில் இல்லை என்பது வெளிப்படை. கொடிய வெப்பமும், விலங்குகளும், கள்வரும் நடமாடும் இடமாகப் புலவர்கள் வேங்கடமலைத் தொடர்ச்சியைக் குறிப்பிடுகிறார்கள்.

செந்நுதல் யானை வேங்கடம் தழீஇ
வெம்முனை அருஞ்சுரம் இறந்தோர் (அகம். 295)

வானிணப் புகவின் வடுகர் தேஎத்து
நிழற்கவின் இழந்த நீரில் நீளிடை
அழலவிர் அருஞ்சுரம் (அகம். 213)

(வடுகர் தேஎம்-வேங்கடத்தை உள்ளிட்ட எருமைக் குட நாடு-இன்றைய மைசூர்)

10 தமிழ்க்காதல் பக். 180.

வேங்கடமலைத் தொடர்ச்சிப் பகுதிகள்தாம் பண்டைய தமிழகத்தின் பாலையாக இருந்திருத்தல் வேண்டும். ஆதலின் வேங்கடம் என்பது வேம்+கடம் எனப் பிரிந்து வேகுஞ்சுரம்–வெப்பத்தால் வேகவைக்கும் பாலைநிலம் என்ற பொருட் குறிப்புடையதாகும்.[11].

கடம்-என்னுஞ் சொல் பாலை என்ற பொருள் தருவதை,

'பெய்மழை துறந்த புலம்பறு கடத்து
கவைமுட் கள்ளிக் காய்விடு கடுகொடி
துதைமென் தூவித் துணைப்புற விரிக்கும்
அத்தம்'

எனவரும் குறுந்தொகைப் பாட்டாலும் (குறுந். 174)

'கடம்பல கிடந்த காடுடன் கழிந்து' எனவரும் சிலப்பதிகார அடியாலும் உணர்ந்து கொள்ளலாம். கடம் என்பதற்கு உரைகாரர் அருஞ்சுரம் என்று உரை வகுப்பதும் கருதத்தகுந்தது.[12]. 'காணேம் அல்லேம் கண்டனம் கடத்திடை.' எனவரும் பாலைக் கலியில் (கலி. 3) கடம்–பாலை என்ற பொருளில் ஆளப்பட்டிருத்தல் காண்க. வடக்கே கிருட்டிணை ஆற்றையும், மேற்கே துங்கபத்திரை ஆறுகளையும், தெற்கே வடபெண்ணை யாற்றையும்' அதனை அடுத்த குன்றுகளையும் (இன்றைய திருப்பதிவரை) அடக்கிய பகுதி தென்னிந்தியாவிலேயே மிக வெப்பமுடைய பகுதியாகும். கோடைக் காலத்தில் 120°; 125° வரை வெப்பம் இருக்குமென த் தற்கால வானியலாளர் கூறும் கூற்றும் இக்கருத்தை உறுதிப் படுத்துகிறது. இந்தப் பெரிய மலையும், காடும் மயங்கிய வெளியைத்தான் பண்டைப் பாவலர்கள் வேங்கடம் என்று குறித்தனராதல் வேண்டும். தொடக்கத்தில் காட்டப்பட்ட இயற்கைவளன் பெரும்பகுதி துங்கபத்திரை ஆற்றை ஒட்டிய வளமையாகும். அதுவும் கோடை நீடிய காலத்தில் வெவ்விய பாலை நிலமாகக் கிடக்கிறது. ஆதலின் வேங்கடம் என்பதற்குக் காட்டப்பட்ட ஏனைய காரணங்களைவிட வெவ்விய பாலைநிலம் என்ற பொருள்பட்ட காரணமே மிகப் பொருத்தம் என்பதுறுதியாகிறது (தொடரும்)

---

11 Rao Sahib. K. Kothandapani Vada Venkadam. Tamil Culture. Vol. IX No. 1. Jan-Mar. 1961. P. 77.

12 சிலப்பதிகாரம், காடுகாண்காதை–வரி-90.

புரட்சிப்பா வேந்தன் புகழ்!

—புத்திரங்கோட்டை. சா. நடராசன்.

இன்பத் தமிழ்முழக்கம் எங்கெங்கும் பொங்கியெழத்
தென்பொதிகைத் தென்றலெனச் செந்தமிழில்—தன்பாட்டால்
என்புருக்கி விட்டான், இருந்தமிழ்பால் நீங்காத
அன்பிருக்கும் நெஞ்சால் அளந்து!

மெல்லத் தமிழ்க்கொடியின் வேருக்கு நஞ்சூற்றிக்
கொல்லவரும் இந்திக் குரங்கதிர—'நில்'லென்றே
ஆர்த்தெழுந்து பாட்டால் அடித்து விரட்டியதோர்
போர்த்திறத்தை என்னென்பேன் போய்!

அற்றைத் தமிழரிடை ஆரியர்கள் 'சாதி,மதப்'
புற்றை வளர்த்துள்ளே பொய்யோடு—மற்றைக்
கொடுமைகளாம் பாம்பைக் குடிவைத்தார்; கொல்லும்
தடிவைத்தான் பாட்டாலே தந்து!

ஏற்றத்தாழ் வில்லாமல் எல்லாரும் வாழ்தற்குப்
போற்றத் தகுந்த பொதுவுடைமை—ஊற்றெடுத்துப்
பாயப் புதுப்பாட்டுப் பண்ணினன்! எண்ணினன்
சாயத் தனிவுடைமை, சார்பு!

'கண்ணருமை போல்பேணிக் காத்தற் குரியதுகாண்
பெண்ணுரிமை' என்ற பெரும்புலவன்—பண்ணருமை
எண்ணப் புரட்சி! இளங்கைம்பெண் மீட்டுமணம்
நண்ண உரைசெய்தான் நன்று!

'பாட்டென்றல் கற்றவர்தம் பால்அணுகிப் பாடங்கள்
கேட்டறிவ' தென்பதனைக் கீழ்மேலாப்—போட்டுவிட்டான்!
கூட்டியெழுத் தெண்ணிப் படிப்பாரும் கொஞ்சுதமிழ்
வேட்டபாச் செய்தான் விழைந்து!

யாப்புப் பிழையொன்றும் யாண்டும் புரியாவெண்-
பாப்புலவன்; நூல்கள் பயின்றவன்—வாய்ப்புற்றின்(று)
ஆர்ப்பாட்டம் போடும் அரைகுறைகள் பாவேந்தன்
காற்புழுதிக் கீடாமோ காண்!

காசுக்கும் வேறுபல காரணங்க ளுக்கும்,தாம்
பேசுகின்ற கொள்கை பிறிதாக்கும்—மாசுடையார்
வாழ்நாளில், தேர்ந்த வழிநடந்தான் தன்னுடலம்
வீழ்நாள் வரைக்கும் விரைந்து!

கண்ணோட்டம்!

பாரதிதாசனின் இளையர் பாடல்.

-ந. சரவணத்தமிழன்-

அரசியல் மேடைகளில் அம்பலப்படுத்தப்பட்ட ஓரிரண்டு உணர்வுப் பாடல்களும், பட்டிமன்றங்களில் புதிதாய்ப் பொருந்தாத தலைப்பில் பயிற்சி இல்லார் பிழையுறக் குழறும் மேற்கோள் பாடல்களுமே பாரதிதாசனாரின் உருவைக் கோணல் கூனலாகக் காட்டிக் கொண்டிருக்கின்ற இற்றை நாளில் அவ்வியற்கைப் பாவலனின் பல்கோணத் தோற்றத்தில் நன்றொன்றாய் யாரும் அறியக் கிடவாச் சிறார்ப்பாடல் நயமுணர்த்தல் கடவதுஎனும் கருத்துடையேன்.

இளையர் பாட்டெழுதல் பாட்டுத் திறமுடையார்க்கும் இடருடைத்தொன்றே! இற்றை உளவியற்படி குழந்தையர் அறியும் சொற்கோவை பயில்பொருள்கள், துய்ப்புணர்வுகளைக் கொண்டே ஆக்கல்வேண்டும் என்பர். அது முதிர்ந்தார்க்கு உள்ளத்தால் மகவாந் தகவிலார்க்கு மாட்டுவதன்று. அன்றியும் ஒழுகிய இசையும் பழகிய பண்பும் அழகிய (யாப்பு)உருவும் கொண்டமைந்து பாடுவார் வாயினின்று தானே நழுவும் தன்மைத்தாதல் தகவது. பிள்ளைத்தமிழ்-பண்டைக் குழந்தை இலக்கியம் என்று சப்பைக்கட்டுவார், பிள்ளையின் மேலிட்டுக் கடுநடையினே பாடுதலும், பிள்ளைவாயில் புக்குப் புறப்படப் பாடுதலும் வேறறியார்; வேறறியாரே! அகவை நிரல் நோக்கியெல்லாம் பாடல் கிளைத்துலவும் மேனாட்டொடு பொருநின் நம்நாடு கீழ்நாடே!

பாரதிதாசனாரின் இளையர் பாட்டு நூலாய் நாட்டவர் கண்களில் காட்சி தருவது இளைஞர் இலக்கியம் ஒன்றே! மற்று முல்லைக்காடு இசையமுது என்றிவற்றினும் சிலபாடல்கள் உள. இவற்றின் சுவையை நரம்புக் கடிவாளங்களைப் பற்றிக் குதிரை யேறுவதைக் குனிந்து கொடுத்தவர் அனைவரும் அறிவர். தொடக்கம், பொருநர்கள், காட்சியமைப்பு, கதை, உரையாடல், மெய்ப்பாடு, இசை, நெறிப்பாடு, தொகுப்பு, முடிப்பு இவற்றான் எல்லாம் முழுதொருங்கமைந்த திரைப்பட இலக்கியமாய குடும்ப விளக்கினுள்ளே வரும் குழந்தைப் பாக்களின் அதிர்வுகள் குருதி நாளங்களில் குறுகிய வழியில் நீந்தி அலையிடுமே!

அதனில் 'தலைவிரித்து உடல் இளைத்து ஒற்றைக் காலால்நிற்கும் தென்னை; நீரேதும் காப்பேதும் கேளாமல் நீண்டுயர்ந்த பனை,

மாணிக்க மாம்பழங்கள் தரு மா, சிற்றூனைக் குட்டிபோல் வேரிற் பழம் கிடக்கும் பலா, விற்கோல்போல் கோடுடைய மாதுளை, தெருத்திண்ணை போற் பெரிய இலைகள் ஈயும் வாழை, நண்டின் கட்சிறிய கனியுடைய களா, காட்டுமுயற் காதிலையும், களியானைத் துதிக்கை அடிமரமுமாய கொய்யா-முதலியவற்றைப் பாடும் குழந்தையர் உடலத்துள் பாரதிதாசனாரின் புலம்பன்,(ஆன்மா) கூடுவிட்டுக் கூடு பாய்வது போல் குடிபோய மாய்கையைக் காண்கின்றோம். அன்றியும் சோறூட்டற்கும், சப்பைக் குதிரையில்லாத் தமிழக் குதிரையை ஓட்டற்கும் இசைப்புறும் பாடல்களின் ஒவ்வோர் அடிக்கும் விரிவுரை எழுத விரைகின்ற கையையும் விரிகின்ற நெஞ்சையும் சுருக்கிக் கொள்கின்றேன். நான்கடியானுய எட்டு வருகைப் பாடல்களில் 'தண்டை குலுங்க ஓடிவா' என்றும் ஒரு வரவுரை அன்றிய அறுபத்துமூன்று புத்துநவங்களை நினைந்து பார்க்கவும் நெஞ்சகன்றின்றே!

முதற்றெகுதியில் இடம்பெற்றிருக்கும் இருபால் தாலாட்டுகளும் பகுத்தறிவு நோக்கில் அமைந்தவை. பாட்டியல்பில் பொருட்கு முரணும் தன்தனிக் கொள்கையைத் திணித்து உரைத்தல் சாலாது என்னும் இலக்கிய நோக்கர் கருத்துக்கொப்ப இளைஞர் இலக்கியத்தில் நகைநலம்படவும், குடும்பவிளக்கில் செவ்விலக்கியத் திறம்படவும் யாத்த தாலாட்டுகள் அவர்தம் உள்ளுணர் வொழுங்கை உணர்த்தும். பெண்குழந்தைத் தாலாட்டினே தாய்ப்பாட்டும், 'பெண்ணழகே' என்பதற்கு மாற்றாக 'ஆணழகே' எனச் செறிப்பின் இயையும் அம்மாய்ச்சி (மலர்க் குழல் பாட்டி)யின் பாட்டும் பொதுப்பால் பாட்டாதல் பாட்டியல் நுணுக்கம்.

'படிப்பும் பேச்சும் இயற்றமிழ்
பாடும் பாட்டே இசைத்தமிழ்
நடிப்பும் கூத்தும் சேர்ந்ததே
நாட கத்தமிழ் என்பார்கள்.

என்று பாடம் பயிற்றுவதும்,

'ஆரஞ்சுப் பழத்தையும்-தம்பி-நன்கு
ஆராய்ந்து பார்த்தபின் வாங்கு
நீர்சுண்டி இருக்கவும் கூடும்-அது,
நிறையப் புளிக்கவும் கூடும்

ஒரொன்றை உண்டுபார்–தம்பி–அது,
உகந்ததென்றால் பின்புவாங்கு.
பரொங்கும் ஏமாற்று வேலை–மிகப்
பரவிக் கிடக்கிறது தம்பி!

என்று அறிவுரை கூறுவதும் அவரின் தனித்திறல்.

தலைவாரிப் பூச்சூடியும் சிலைபோல நின்று சிந்தாத கண்ணீரைச்சிந்தும் மகளைப்பள்ளிக்கு ஆற்றுப் படுத்தலும், காலுக்குப் புன்னையிலை போலும் செருப்பணிந்து கையில் விரித்த குடைதூக்கி நல்ல கல்விக் கழகமதை நோக்கிப் பசும்பாலுக்கு நிகர் மொழிப்பாவை செல்வதைக்காணும் அன்னையின் எண்ணச்சிதறலும் அவர்க்குப் பெண்மகவே விருப்பாதலைக் காட்டும் போலும். பெண் குழந்தை பிறந்தது என்றதும் குமுகாயக் குழறுபடிகளை நோக்கிக் கண்கசக்குவார்க்கு அவர் உள்ளம் வாய்வதாக.

ஒருகாட்சி: பள்ளிக்கு அண்டைவீடு; ஒருசிறுன்; சிறுள்; பள்ளிப் பறவைகள். பள்ளித் தொடக்கப் பொழுது நெருங்கிக் கொண்டிருக்கிறது. இதோ–முதல்மணியும் அடித்தாயிற்று. இருவரும் ஒரு மூலையில் மறுகிக் கொண்டிருக்கின்றனர். தந்தை பார்த்துவிட்டார் தாய் உள்ளே அலுவலாய் இருக்கிறுள்: அவர் வினவுகிறுர்.

கணகண வென்று மணியடித்தது
காது கேட்கலையா—தம்பி
காது கேட்கலையா—பாப்பா
காது கேட்கலையா—உன்
கையில் சுவடிப் பையை எடுக்க
நேரம் வாய்க்கலையா!
முணுமுணு வென்று மூலையில் நின்றால்
என்னவரும்—தம்பி
என்னவரும்—பாப்பா
என்னவரும்—என்
முன்னே வந்து சொன்னால் வாயின்
முத்தா சிந்திவிடும்.
பலகை இல்லையா? எழுத்துப்
பலபம் இல்லையா—தம்பி

பலபம் இல்லையா — பாப்பா
பலபம் இல்லையா— வீட்டுப்
பாடம் எழுத மறந்த துண்டா
அந்தத் தொல்லையா?
சலவை செய்து வந்த சட்டை
வேண்டும் என்றுயா?— தம்பி
வேண்டும் என்றுயா?— அழுக்கு
வேண்டாம் என்றுயா? — இதோ
சலவை சட்டைப் போட்டுக் கொண்டாய்
சிரித்துக் கொண்டாயா?
*மனத்தில் உள்ளதை எடுத்துச் சொல்ல
வாயும் இல்லையா?— தம்பி
வாயும் இல்லையா— பாப்பா
வாயும் இல்லையா— நின்
வாய்திறந்தால் கொடுக்கத் தந்தை
தாயும் இல்லையா?
தனித்தமிழில் கல கல வென்று
தட்டாமல் பேசு— தம்பி
தட்டாமல் பேசு— பாப்பா
தட்டாமல் பேசு— நீ
சாலை யோரம் நடக்க வேண்டும்
எங்கே கைவீசு.

இப்பாடலை ஓசையூட்டி நீட்டிப் பாடின் அஃது இருசெவியையும் கதுவிப் பிஞ்சுத் தலையை ஆட்டுவித்தல் கண்கூடு. முன்றுள் மாலையினும், காலையினும் கொட்டமிடும் குழந்தையர் பள்ளிக்குப் போம்போது எவற்றின் பொருட்டெல்லாம் தியங்கித் தயங்குவரோ அவற்றையெல்லாம் உரைத்துள்ளமை ஊன்றி உணர்க. கற்பலகை உடைந்ததா? கெட்டதா என்பதைப்

(* மனதில் என்றே குயிலில் அச்சாயிருப்பினும்- தனித்தமிழில் என்பதனேடொப்ப 'மனத்தில்' என்பதே உண்மைப் பாடமாதல் தெளிக. என்னெனில் அத்துச்சாரியை பெருத வடமொழி ஒலிபெறல் வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா? என்றுய்ந்த பெருமகனுர்க்கும் உவப்பாகாது ஆதலின்.)

'பலகை இல்லையா' என்று மெல்லெனவும்' 'பெரும்பால் எல்லாப் பிள்ளையரும் நாளும் தொலைத்துவரும்' பலப்பத்தையும், அடுத்து வீட்டுப்பாடம் எழுதிலரேல் ஆசிரியர்க்கு அஞ்சித் துடிப்பதும் முன் எழுதியவரைப் பார்த்துப் படிஎடுப்பதும் ஆய இயல்பையும்; அன்றேல் சட்டைச் சிணுங்கல் திட்டமாகு மாகலின் அதனையும் முறையில் வினவும் அழகு-பா-முருகு பாடலின் திறவுகோலாய் அமைந்துள்ள கருத்தின் முதிர் நலம் முன்னி முன்னிச் சுவைக்கற் பாலது. பெற்றோர் பெண்ணுர்க்கே தக்க புனைவுப் பொருட்களும் ஆடையும் போதிய அளவு பொதிந்திருப்பதும், பையரே உடையை விரைந் தழுக்குறுத்தலையும் பட்டறிந்தார் அறிவர். ஈண்டும் அவ்வாறே இருவரையும் நோக்கிய தந்தை உண்மை யுணர்ந்து தன்குறையை மகன் தன் தங்கையிடம் முணுமுணுத் துக் கொண்டிருப்பதன் கரணியத்தைக் கண்டுகொண் டார். (பலகை கூறப்படுதலின் ஐந்தாம் நிலையின் உட்படப் பயில்வோர் என்றும், தம்பியை முற்பட வினதலின் அறிவறிவ தின் மூத்தான் என்றும் உய்த்துக் கொளலாம்)

இப்பிள்ளையர் பிறர் போலாது வீட்டுப் பாடத்தை முடித்திருத் தலின் கட்டுப்பாடும், பெற்றோரிடம் வெளிப்படக் கிளந்து நச்சரி யாமையின் ஒழுங்கும் பிற குழவியர்க்குத் தெரிவுறுமே! வாய்வா ளாமை 'வேண்டுவதில் வேண்டுக' என்பார் ஊக்கப்படுத்துங்கால் 'தனித்தமிழைச்' சுட்டியிருத்தல் அவர் எதிர்காலக் கனவு. இன் னும் 'காது கேட்கலையா? முணுமுணுவென்று மூலையில் நிற்றல், முத்தா சிந்திவிடும் 'என்றல், வாயும் இல்லையா?'—என்ற இவ் வியல்பாட்சியை எடுத்து உரைத்தல் தேனை நாவிலிட்டுச் சுவை கூற முந்துவதாம். இப்பாட்டு இருங்கால் எதிரிருக்கும் பிள்ளை யின் பிஞ்சுக்கை அசைந்து கொண்டிருக்குமே!

பா, பொருள்நோக்கி உருவமைய வேண்டுவது அனைத்திற் கும் ஒவ்வுமேனும் குழந்தையர் பாட்டிற்கு மூதற்றும். அஃதொப்ப ஓரரிய பாட்டியற்றியருளிய பாவேந்தரின் கைக்குத் தமிழ்ச்சிறுர் உலகம் என்றும் கும்பிடுபோட்டுத் திரிதல் வேண்டும்.

அது—

நூலைப்படி-சங்கத்தமிழ் (பழந்தமிழ்)
நூலைப்படி-முறைப்படி
நூலைப்படி-

காலை யிற்படி கடும்பகல் படி
மாலை யிரவு பொருள்படும்படி (நூ)

அறம்படி பொருள்படி
அப்படியே இன்பம்படி
இறந்ததமிழ் நான்மறை
பிறந்ததென்று சொல்லும்படி (நூ)

அகப்பொருள்படி அடுத்தபடி
புறப்பொருள்படி நல்லபடி
புகப்புகப் படிப்படியாய்ப்
புலமைவரும் என் சொற்படி (நூ)

பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூல்களை ஒப்புவதெப்படி (நூ)

சாதிஎன்ற தாழ்ந்தபடி
நமக்கெல்லாம் தள்ளுபடி
சேதிஅப்படி தெரிந்துபடி
தீமைவந்திடுமே மறுபடி (நூ)

தொடங்கையில் வருந்தும்படி
தோன்றிடினும் தொடர்ந்துபடி
அடங்கா இன்பம் மறுபடி
ஆகும் என்ற ஆன்றோர் சொற்படி (நூ)

இது,

'பொருள் விளங்குமோ' என்று இதழ்க் கடையில் நகையொடு நாவினையும், விழிக்கடையில் பகையொடு பாவையையும் உருட்டு வார்க்கு எம்பள்ளியின் சிறுசெந் நாக்களில் இச் செந்தமிழ்ப் பாடல் கொப்பளிப்பதும், அக்கால் உள்ளம் கொந்தளிப்பதுமே சான்று. இலக்கியப் பயிற்சி இன்மையான் சொற்களஞ்சியம் குறைவுபட்ட ஒரேவாய்ப்பாய் 'எட்டு லட்டு'களைப் பற்றித் தட்டுத் தடுமாறிக் கொட்டும் பாட்டுடையார்க்கிது எடுத்துக் காட்டாம்.

படிகட்டிப் படிக்கட்டில் கைகட்டி நிற்கும் நெட்டித் தமிழரைச் சுட்டும் போதும் ,திருக்குறள் பெருமையைத் தெரிக்குங்காலையும்

'தொன்னூற் படியில்லை; திராவிடர்தூய கலையொழுக்கம்
பின்னூற் படியின் பெரும்படியில்லை; பிழைபடியா
அந்நூற் படி,திரு வள்ளுவன் தந்தனன்; ஆயிரத்து
முந்நூற்று முப்பதும் முத்தாக மூன்று படியளந்தே!'

என்றும் குண்டானில் பெரும்படியால் அள்ளிக் கொட்டியவர் சிற்றில் ஏனத்தில் சிறு மரப்படியால் பெய்ததையும் நோக்குமின்!

இலக்கணக் கருத்தூட்டம் மிக்க பாவலர் இலக்கணத்தின் அடிப்பாட்டுச் செய்திகளை மனப்பாடத்தால் முடித்தலில் எழுத்து வரிசை இடர்ப்பாடு தரும் உள்ளியல் அறிந்து அம்மருந்தைத் தம் பாட்டியல் தேனில் குழைப்பதைப் பாருங்கள்:-

கசட தபற கசட தபற
இருகுருவிகள் கூட்டுக்குள்
இப்படிப் பாடின பாட்டுக்கள்:

ஙஞண நமன ஙஞண நமன
என்றொரு பூனை தூலத்தில்
மெதுவாய் ஏறிய காலத்தில்

யரலவழள யரல வழள
எனப்பறந்தன சிட்டுக்கள்
எதிரில் சன்னல் வெட்டுக்கள்.

முதியர் இடைஞர் இளைஞர் அனைவோர்க்கும் என்ற பாட்டுகள் குழந்தையர் பாட்டு எழுதுவதில் அவர் பாட்டனே! ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டுகள் எழுதிய திருக்கைகளானே பிஞ்சு நெஞ்சங்களையும் வருடிய அவர்தம் மார்பண்ணுர்ந்து , வாய் அங்காந்து உமிழச்செவி தொன்னுந்து நெஞ்சுள்ளார்ந்து கமழும் பாடல்கள் முழுதுறத் திரட்டிய நூல் இதுகாலும் அரசாணுதல் பிறராணுதல் வெளிப்பட்டிலது. அஃதும் மலிவுப் பதிப்பில் இன்னே செயவேண்டுவதோர் நற்கடமை.

அச்சாகு நூலெல்லாம் நூலாமோ? ஆங்கு சிலர்
மெச்சியுரை செய்வதனால் மேலாமோ?-முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோறாய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு!

பாட்டுப் பறவை

பாடல்கள்:

ஆசிரியர்: ஏ. சண்முகம்.

விலை: 1-50. உருபா. (பக்கங்கள் 84)

கிடைக்குமிடம்: அழகுப் பதிப்பகம், காரைக்குடி.

இருபது தனிப்பாடல்களின் தொகுப்பாகும் இந்நூல். "பாட்டுப் பறவை" எனும் இந்த நூல் என் நெஞ்சப் பறவை தன் கற்பனைச் சிறகுகளை விரித்து உலகின்மேல் பறந்து பாடிய பாடல்கள்" என்று நூலாசிரியர் இதனைப்பற்றிக் கூறுகின்றார். பாடல்கள் உணர்வோட்டம் நிரம்பியவாகவும், யாப்பு பிறழாதனவாகவும் உள்ளன. பாட்டென்ற அமைப்பில் தற்காலத்து எழுதப்பெறும் உளறல் ஓசைகளைப் போலன்றி முறைபாக இந்நூலிலுள்ள பாடல்களை யாத்திருப்பது பாராட்டுதற் குரியது.

"தேர்த்தடம் பதிந்த வீதி", "எலிக்கடி பட்டழிந்த, எளியவர் துணிகள்போல", "அணில் வாலைப் போன்ற மீசை அமைந்த நற்புலவர்"—என்ற உவமைகள் ஆசிரியரின் கற்பனைத் திறனுக்கு எடுத்துக் காட்டுகளாகும்.

"வானழுத கண்ணீரை மழைஎன் பார்கள்;
வையமகள் கண்ணீரைக் கடல்என் பார்கள்;
தேனென்பார் மலர்சிந்தும் கண்ணீரைத்தான்!"

—என்ற வரிகள் இயற்கையை ஆசிரியர் நுணித்துப்பார்க்கும் திறனை வெளிப்படுத்துகின்றன.

"இருட்டறையில் மணியடித்துக் கடவுள் பேரால்
இழிசெயல்கள் செய்கின்ற எத்தர் எல்லாம்
குருட்டுமதப் போர்வையிலே உலவு கின்றார்"
"சாத்திரத்தால் பிறர்வாழ்வைச் சூறையாடிச்

சத்திரத்தில் இல்லறத்தை நடத்துகின்ற
தீத்திறத்தார் இவரெல்லாம் துறவி என்றே
திரிகின்ருர் தமிழ்நாட்டில் சீச்சீ!"

—என்ற கருத்துகள் இவரின் சீர்திருத்த உள்ளத்தை நன்கு புலப்படுத்துகின்றன, போலிச் சமயப் புரையோட்டம் மக்கள் அமைப்பில் எத்தகைய தீத்திறங்களைப் பாய்ச்சுகின்றன! இத்தகைய போக்கைக்கண்டு மனம் வெதும்பி அஞ்சாது கண்டிக்கும் மனவன்மை உண்மைப் பாவலனுக்குக் கட்டாயம் இருத்தல் வேண்டும். இத்திறம் இவரிடம் உள்ளது பாராட்டுதற்கும் மதித்தற்கும் உரியது,

இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் முதல் பரிசுபெற்ற 'புகாரில் ஒரு நாள்' முதல் பாட்டாக—நூலுள் சேர்க்கப்பட்டுள்ளது. இப்பாட்டு அமைப்பிலும் ஓட்டத்திலும் சிறந்ததேனும் கருத்தில் அவ்வளவு சிறந்ததன்று. இக்காலத்து நடைபெறும் கவைக்குதவாத ஆரவார மேடைப் பேச்சுகளைப் போலவே, இப்பாடல் தேவையற்ற, வீணான கற்பனைகளைக் கொண்டு விளங்குதல் நகைப்பை விளைவிக்கின்றது. பண்டைப் புலவர்கள் காட்சிகளை நேருக்குநேர் கண்டு, துய்த்துப் பாடிய பெருமிதம் எங்கே! வாய்ச் சரளைகளை வீசும் இக்காலத்தவரின் ஆரவாரச் சொற்கள் எங்கே!

'அமுத பார்வை' என்ற பாட்டுவழி ஆசிரியர் பார்க்கும் பார்வை உயர்ந்ததாக விருப்பினும், பார்க்கக்கூடாத இடங்களில் செலுத்தும் பார்வை சிற்சில அடிகளில் அருவருப்பை வடிக்கின்றது. "மண்ணைப் பாரீர்" —நல்ல கற்பனை. "நான் கடவுளானல்..."—உயர்ந்த நோக்கத்தில் விளைந்ததேனும், மெய்யறிவுக் கண்ணேட்டத்தில் பொருளற்ற பிள்ளைக் கற்பனை. இப்பாடல் "நான் ஆணையிட்டால்"—என்ற ஆரவாரத் திரைப்படப் பாட்டைபோல் அரசியல்(!)கற்பனை நிறைந்தது. "யானைப் பாட்டு" நயமிக்கது; நல்ல பாட்டு.

தலைவர் ஒருவரைப் புகழ்கையில் அளவற்ற வெற்றுப் பாராட்டுரைகளை வாரி வழங்குவதாலேயே, பாராட்டுப் பெறும் தலைவர் உயர்ந்தவர் ஆகிவிடார். பொதுத் துறையில் புகுந்த இற்றைத் தமிழர் இவ்வழி அளவிறந்த ஆரவாரம் செய்தல் அறிவுடையார்க்கு நகைப்பைத் தருவதாகும். நேருவைப்பற்றிய பாடலில் இந்நூலாசிரியரின் பாராட்டும் அத்தகையதே.

"தெள்ளுதமிழ்க் குறள்தந்த வள்ளுவன்தான்
திருநாட்டில் நேருவாய்ப் பிறந்து நின்ருன்

கொள்ளும்நெறி தனையுணர்த்திச் சென்ற ஏசு
குவலயத்தில் நேருவென மீண்டும் வந்தான்.
எல்லையிலாப் புகழ்படைத்த பாரதத்தின்
இறந்திட்ட முன்னோரின் தலைவரெல்லாம்
நல்லதொரு வடிவாகி நேருவென்ற
நற்புகழ்சேர் பெயரினிலே வந்து நின்றார்!''

இக்காலத்து அரசியல்காரர்கள் உண்மையைக்கூறிப் பாராட்டுச் செய்யாமல், ''இந்திரன், சந்திரன்'' என்று தம்மைப் பிறரும், பிறரைத் தாமும் புகழக்கூறி வாயும் செவியும் இனிப்புறுவது போன்ற நடைமுறையை, இவ்விளம் பாவலர் இனியேனும் கைவிடுக.

தமிழ்நாட்டில், தமிழ்மொழியில், தமிழர்க்காகத் தமிழர் செய்யும் இலக்கியத்துள் வடசொற்கள் கலப்புறுவது எந்நிலையிலும் ஏற்கத் தக்கதும் சிறந்ததும் ஆகாது. தூய தமிழ்ச் சொற்கள் இருக்க, மேகம், அதிசயம், சிந்தை, உதயம், இதயம், மதம், பதம், விரயம், பூமி, அகிலம், கீதம், சஞ்சரித்தல், அற்புதம், சிற்பம், பிரியம், உத்தமன், வித்தகர், சத்தியம், உதித்தார், பேதம் ஆதவன், நீதி முதலிய எண்ணிறந்த வட சொற்களை இந்நூலாசிரியர் கையாண்டிருப்பது, மொழிச் சிறப்பு பற்றி இவர் இதுவரை ஏதும் கவலைப்படாமல் இருப்பதையே காட்டுகின்றது. ஒருவேளை மொழியறிவுக் குறைபாடாகவும் இருக்கலாம்; அவ்வாறில்லாது வேண்டுமென்றே இக்கலப்பைச் செய்வது மிகவும் கண்டிக்கத் தக்கதாம். பொதுவில் இந்நூல் ஒரு பாராட்டத்தக்க முயற்சி!

—குட்டுவன்.

வரப்பெற்ற நூல்கள்.

(நூல்நிறைக்காக வரப்பெற்ற கீழ்க்காணும் நூல்களுள் சில, பின்னர், முறையாக நிறைசெய்யப் பெறும்)

நூல் விளக்கம்.	வெளியீடு அல்லது கிடைக்குமிடம்.
1. வாழ்வுநெறி (கட்டுரைகள்) தொகுப்பாசிரியர்: பண்டுவர்: வி. கே. இராமச்சந்திரன். விலை 1-50 உருபா,	வள்ளுவர் பதிப்பகம், வடக்கு இராசவீதி, புதுக்கோட்டை.
2. இரண்டு புரட்சிகள் (வரலாறு) மூல ஆசிரியர்: இலாக்கார்ட் பெயர்ப்பு: சு. இராசன் விலை 1. உருபா.	தேசிய இலக்கியக் கழகம், 9. அன்சாரி அங்காடி, தில்லி-6.

3. சீனத்தொழிலாளிகள்

(குழுகாயவியல் கட்டுரைகள்)
மூலம்: பீரீஃச்டிலி.
பெயர்ப்பு: சு. இராசன்.
விலை 75 காசு.

தேசிய இலக்கியக் கழகம்,
தில்லி-6

4. உருசியப் புரட்சியின் சாதனை

(அரசியல் கட்டுரை)
மூலம்: சான் கீப்.
பெயர்ப்பு: சு. இராசன்.
விலை 30 காசு.

ஷை

5. உருசியப் புரட்சி

(அரசியல்)
மூலம்: சத்தியப்பிரகாசு.
பெயர்ப்பு: சு. இராசன்.
விலை 30 காசு.

ஷை

6. தமிழ்ச்செல்வி உலா

(பாட்டு)
ஆசிரியர்: சு. சாம்ராசு.
விலை 30 காசு.

சு. சாம்ராசு
மேலமிடாலம்
கண்ணவிளை
உதயமார்த்தாண்டம் (அஞ்) குமரி. மா. வ.

7. திருக்குறள் ஆராய்ச்சி

(இலக்கிய ஆய்வு)
ஆசிரியர்; எம். சோமசுந்தரம் இ. க; ஆ. ப,
விலை 1-50 உருபா.

ஔவை இல்லம்,
காட்டுமன்னார்கோவில்
(தெ. ஆ.)

8. எண்ணியல்

(கணக்கியல்)
ஆசிரியர்: புலவர். எசு, நடராசன்.
விலை 1-00 உருபா.

இலக்கிய நூலகம்
வடக்கு இராசவீதி,
புதுக்கோட்டை.

9. பொன்னி
(இலக்கியத் திங்களிதழ்)
ஆசிரியர்: பொன்னித்துறைவன்
தனியிதழ் 30 காசு.

பொன்னிப் பதிப்பகம்,
அ. பெ. எண்: 2190.
கோலாலம்பூர்.

10. திருக்குறள் பாட்டு
(குழந்தைப் பாடல்கள்)
ஆசிரியர்: வேலூர்-வள்ளல்
விலை: 15 காசு.

வெற்றிவேல் வெளியீடு.
காந்திசாலை.
வேலூர்-வ. ஆ.

11. கறிவேப்பிலை
(கதை)
ஆசிரியர்: கலைவேந்தன்
விலை 2-00 உருபா.

முத்தமிழ்ப்பண்ணை,
மணல்மேடு
மாயூரம் வட்டம்.

12. அண்ணா ஆட்சியின் அருஞ்செயல்கள்
தொகுப்பு: கு. வெற்றியழகன்
விலை 50 காசு.

கு. வெற்றியழகன்,
23, சூரப்பமுதலித்தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5

13. உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு நினைவுமலர்
விலை இல்லை

தூய சவேரியார் கல்லூரி
மாணவர் இல்லம்
பாளையங்கோட்டை.

14. **FOUR PAPERS**
on
Literature and Linguistics
விலை 1-75

மீனாட்சி புத்தக நிலையம்
60, மேற்கு கோபுர வீதி
மதுரை-1.

15. தொழில் நுட்பம்
(வரிசை-5)

கோவை தொழில் நுட்பக் கல்லூரி
பல்தொழில்கூடம். கோவை-14.

16. தமிழ் இன்பம் (1968)
(பத்தாம் ஆண்டு மலர்)

தமிழ் மன்றம்
பாரத மின்-உன் எனு விடலகம்
(Bharat Electroni s Ltd)
பெங்களூர்-13.

நமது பிற்போக்கான பொருளியல் அமைப்பு.

ந. பெருந்தேவன்.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பிறகும் நமது நாட்டின் பிற்போக்கான பொருளியல் அமைப்பு மேன்மேலும் சீர்கேடுற்று வருவது ஏன்? திட்டங்களைக் குறைகூறுவதா அல்லது திட்டங்களை நடத்தும் அரசினரைக் குறைகூறுவதா? திட்டங்களை நடத்துவது யார்? திட்டக்குழுவா அல்லது அமைச்சரவையா? காலஞ்சென்ற பண்டாரகர் மத்தாயின் கருத்துப்படி இரண்டுமே இருப்பது இன்னலையே விளைவிக்கும். அஃது ஏன் என நோக்குவோம். முதலில் அமைச்சருக்கும், திட்டக்குழுவிற்கும் உள்ள வேறுபாட்டை நோக்குவோம். திட்டக்குழு பொருளியல் வல்லுநர்களைக் கொண்டது. ஆனால் அமைச்சர் பொருளியல் வல்லுநராய் இருக்கலாமா? அப்படி இருந்தால்—

—மோதல்தான் நேரும். இரண்டு அறிஞர்கள் அதுவும் இரு பொருளியல் வல்லுநர்கள் என்றுமே ஒன்றுபடமாட்டார்கள். இஃது இயல்பு. மேலும் இன்றிருக்கும் அமைச்சர் இன்னும் ஐந்தாண்டுகளுக்குப்பின் இருப்பாரோ மாட்டாரோ? ஆகவே நிலையற்ற அமைச்சரவை, அறிஞரவையாய் இருப்பினும் இல்லாவிடினும் நிலையான திட்டக்குழு அறிஞர்குழுவாக இருக்க வேண்டும். அந்த அறிஞர் குழுவின் சொற்படி அமைச்சர்குழு நடக்க வேண்டும். அதை விடுத்து பண்டாரகர் வி. கே. ஆர். வி. இராவ் போன்ற பொருளியல் வல்லுநர்களுக்கு அமைச்சர் பதவி கொடுத்துத் திட்டக்குழுவினின்று நீக்கித் தம்வயப்படுத்தி வாய்ப்பூட்டு போட்டுவிட்டுத் தாமே ஆள நினைப்பது அறிவுடைமை ஆகாது. இஃது அமைச்சர்களுக்கு நலன் பயக்கலாம். ஆனால் நாட்டுக்கு நலன் பயக்காது. அறிவுடைமையோடு ஆராய்ந்து பார்க்காது எதையும் செய்வது என்பது அரசினரின் வழக்கமாகிவிட்டது. சான்றாக உருபா மதிப்புக் குறைப்பைக் கூறலாம்.

இஃது எதற்காகச் செய்யப்பட்டது? அதன் வாயிலாக ஏற்றுமதி பெருக வாய்ப்பேற்படலாம் என்று அமைச்சர்கள் ஒருவேளை எதிர்பார்த்திருப்பார்கள். ஆனால் கிடைத்ததோ ஏமாற்றம். எதிர்பார்த்திருப்பதின் விளைவே ஏமாற்றம் என்பதை அவர்கள் முன்பே உணரவில்லை போலும்! ஆனால் ஏற்றுமதி குறைந்தது உருபா மதிப்புக் குறைந்ததனால் அன்று. உருபா மதிப்புக் குறைக்கப்படாதிருந்தாலும் ஏற்றுமதி

குறைந்துதான் இருக்கும். அதற்கு உண்மையான கரணியம் இன்றி மையாத ஏற்றுமதிப் பொருள்கள் உருபாமதிப்புக் குறைப்பின்போது "நீட்சியில் நிலைத்தேவை" (Inelastic demand) பெற்றிருந்ததே ஆகும். உருபா மதிப்பைக் குறைத்தால் விலை குறையும்: விலையைக் குறைத்தால் வெளிநாட்டார் தேவை பெருகுமென் றெண்ணினர். அப்போது பொருள்கள் நீட்சியில் நிலைத்தேவை பெற்றிருந்ததால் விலை குறைந்தும் வாங்குவோர் பெருகவில்லை. மாறுகக் குறைந்தல்லவோ போய்விட்டனர்! பின் அவர்கள் தரும் பணமும் குறைந்து போய்விட்டதே! உருபாவின் மதிப்பு குறைந்ததாலும், ஏற்றுமதிப் பொருள்களின் அளவு குறைந்ததாலும் நிகழ்ந்ததே இது. இனியேனும் இதுபோன்ற நடவடிக்கைகளில் அரசினர் தங்கள் அறிவைப் பயன்படுத்த முடியாவிடினும், அறிஞர் குழுவைக்கேட்டு அதன்படி செயல்படாவிடின் நாடும், நாட்டுப் பொருளியல் அமைப்பும் குட்டிச்சுவராகி விடும்.

நம் நாட்டுப் 'பொருளியல் அமைப்பை'ப் பொறுத்தமட்டில் ஆராய்ந்து பார்த்தோமாயின் அதைக் கெடுத்து வருவது அரசியலே. செல்வன் மேன்மேலும் செல்வனுவதும், ஏழை மேன்மேலும் ஏழையாவதும் எப்படி? ஏழைகளின் ஒப்போலைகளைப் பெற்று அமைச்சரவை அமைத்ததும் தனக்குவேண்டியவர்களை எல்லாம் எவ்வளவு பேராக இருந்தாலும் அமைச்சர்களாக்கிவிடும் அருவருக்கத் தக்க வழக்கம் செலவை மேன்மேலும் பெருக்கி வருகின்றது.

புதுவை, கோவா, அரியாணு போன்ற சிறு சிறு மாநிலங்களுக்கெல்லாம் ஓர் அரசும், அமைச்சரவையும், அமைச்சர்களும் தேவையா? நாட்டிற்குத் தலைமை அமைச்சர் இருக்கையில் உதவித் தலைமை அமைச்சர் வேறு தேவையா? நாட்டை ஆளத் தலைமை அமைச்சர் இருக்கையில் மக்கள் தலைவர் வேறு தேவையா? மாநிலத்தினை ஆள முதலமைச்சர் இருக்கையில் ஆளுநர் (கவர்னர்) வேறு தேவையா?

மாநில அமைச்சர்கள் தங்கள் வருவாயைக் குறைத்துக்கொள்வதைவிட, தங்களது 'வாழ்க்கைச் செலவு' (Cost of Living) தனைக் குறைத்துக் கொள்வதே முதலில் தேவை. அமைச்சர்களுக்காக அரசு செய்யும் செலவு நாளுக்குநாள் பெருகி வருகிறது. இந்தப் பணம் மக்களது வரிப்பணம், நேர்மையான அரசாக, செல்வர்களுக்குத் துணை போகாத அரசாக, இந்திய அரசு இருந்தால் அது செல்வர்களிடம் பெற்ற வரிப்பணத்தை தொழிலாளர் நலனிற்கும், உழவர் நலனிற்கும்

செலவிட வேண்டும். அதை விடுத்துத் தொழிலாளர்களிடமும், உழவர்களிடமும் மறைமுக வரி (Indirect Tax) மூலம் பணத்தைப் பெற்று அப்பணத்தை அமைச்சர்களுக்காகவும், அமைச்சர்களின் அடிவருடிகளுக்காகவும் செலவிட்டு வருகிறது இந்திய அரசு. தொழிலாளர்களிடமும், உழவர்களிடமும் அரசு வருவாய்வரி போன்ற நேர்முக வரி (Direct Tax) வாங்காததால் வரிச்சுமை அவர்கள்மேல் விழாதது போல் தோன்றுகிறது. செல்வர்கள் மிகுதியாகப் பயன்படுத்தும் பொருள்களான-ஒப்பனைப் பொருள்களையும், உயர்ந்த உடைகளையும், இன்னும் பிறவற்றையும் மேன்மேலும் வரிபோட்டு அதன் மூலம் கிடைக்கும் பணத்தை தொழிலாளர் நலனிற்காகவும் உழவர் நலனிற்காகவும் செலவிடல்தான் 'மக்களாட்சி வழிநின்ற நிகரமை'யை (Democratic Socialism) நிலைநிறுத்த உதவும். இல்லையேல் ஒன்று மக்களாட்சி மறையும்; அல்லது நிகரமை நிலைக்காது.

நம் நாட்டின் பிற்போக்கான பொருளியல் அமைப்பிற்குக் கரணியம் அரசியல்தான் என்பதை மீண்டும் ஒருமுறை வலியுறுத்த விரும்புகின்றேன். பண்டைத் தமிழகத்தில் இருந்ததுபோல் குடியரசாட்சிக்கும் ஒருவரை மட்டும் தலைவராய், ஆள அதிகாரம் அளித்துவிட்டு அறிஞர்குழு அமைச்சரவையாய் நின்றுதவ வேண்டும். O

விளம்பர அறிக்கை.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு பற்றிய விளம்பரச் சிற்றறிக்கைகள் ஆங்காங்கு பரப்பும் பொருட்டு வண்ணத்தாளில் நான்கு பக்க அளவில் அச்சிடப்பெற்றுக் கையிருப்பில் உள்ளன. தமிழன்பர்களும் விற்பனையாளர்களும் தேவைக்கு உடனே ஆவன செய்க!

அவ்வவ்வூர்களிலும் கிடைக்குமிடம் பொறித்துக் கொள்வதற்கான இடம் ஒதுக்கப் பெற்றுள்ளது. அதில் இழுவையச்சு (Rubber Stamp) பதித்துக் கொள்ளலாம்.

500 படிகட்குமேல் வாங்கிக் கொள்பவருக்கு அவர் தம் முகவரிகளும் அச்சிட்டுத் தரப்பெறும்.

அஞ்சற் செலவுட்பட விலை	100—	உரு.	2-00
	1000—	,,	15-00

—அமைச்சர்.

நட்புக் கடல்.

இரா. இளவரசு.

மலைப்பாம்பாய்ப் புரண்டுருண்டு மிக்கமது வுண்ட
மாந்தனைப்போல் விழுந்தெழுந்து படமெடுத்துச் சீறும்
கொலைநாகக் கரும்பாம்பாய்க் கரைநோக்கிச் சீற்றக்
கொதிப்போடு கணமேனும் ஓய்வொழிச்சல் இன்றி
அலையெறியும் கடல்நண்பா? உனக்கேனிச் சீற்றம்?
ஆரடித்தார்? அடித்தாரைச் சொல்லிடுநீ; யான்போய்
வலைவிரித்துக் கையோடு பிடித்திழுத்து நொடியில்
வருகின்றேன்; உன்கையில் தருகின்றேன்; என்ன?

பொருகளத்தில் ஒன்றன்பின் ஒன்றுபடை வரிசை
புறப்பட்டுப் பகைமோதி வலியுடைதல் போல
நிரைநிரையாய் நிலப்பகையைத் தகர்த்திடுதல் வேண்டி
நீவிடுக்கும் திரைப்படைகள் சிதைந்திடுதல் கண்டோ
நுரையெழுப்பி ஓங்காரக் கூச்சலிடு கின்றாய்?
நுவல்கின்றேன் ஒருண்மை நண்பனென்ற முறையில்.
ஒருநாளும் ஆர்ப்பரிப்போ அமைதியை வெல்லாது.
உணர்ந்திடுநீ, கரைமோதிப் பயனில்லை தோழா!

" ஒளிமுத்தைப் புரிவளையைச் செம்பவளந் தன்னை
ஓ!இந்த மாந்தனெனும் பெருந்திருடன் என்னைத்
துளியேனும் கருதாமல் அள்ளிக்கொள் கின்றான்;
துள்ளியென்றன் மடியினிலே தவழ்ந்துண்டு திரியும்
கிளர்மீனும் பிள்ளைகளைக் கொள்ளையிடு கின்றான்;
கீழ்மையிதை அழித்தபின்தான் எனக்கமைதி " என்றே
வளர்சீற்றம் கொண்டுள்ளாய்? வாழ்கஉன்றன் சீற்றம்!
மாந்தன்பெருங் கொடுங்கொள்ளை உண்மை!மிக உண்மை!

பாருண்டோ மழையின்றேல்? மழையுண்டோ வானில்
படர்கின்ற முகிலின்றேல்? கரியமுகில் கூட்டம்
நீருண்ட துன்னிடமே, முகிலுன்றன் சேயே.
நீயின்றேல் உலகெங்கே? மாந்தன்உயிர் எங்கே?
சீரெல்லாம் உன்னாலே எனத்தெரிந்தும் காற்கீழ்ச்
செருப்பைப்போல் உன்னுடலைக் கட்டுமரம் தோணி
தேரென்னும் பெருங்கலங்கள் விட்டுமிதிக் கின்றான்.
சிறிதளவு மதிப்பேனும் தருகின்றா னிலையே!

மணமுடித்துப் பல்லாண்டு கழிந்தபின்றை, பெற்ற
மகனொருவன் மணப்பருவம் எய்திநின்ற வேளை
பிணமான நிலைகண்டு வாய்வயிற்றி லடித்துப்
பிறபிள்ளை இல்லாத்தாய் புரண்டழுதல் போலக்
கணமேனும் ஒழிவின்றி ஏன்புலம்பு கின்றாய்?
காண்!இந்தக் கரையினிலே களித்துவிளை யாடும்
மணமுல்லைச் சிறுவர்களை; காதலர்கள் தம்மை;
மனக்கவலை உதறியெறி! மகிழ்ந்து சிரிப்பாயே!

ஏட்டினிலும் நாட்டினிலும் எத்தனையோ வள்ளல்
இருக்கின்றார் எல்லாரும் இரவலர்கள் சென்று
கேட்டதன்பின் பொருள்தருவார்; அதுவும்அள வோடு.
கேளாமல் விருப்பம்போல் எடுத்துக்கொள் கின்ற
பூட்டில்லாப் பொருட்பேழை உன்னுடைய தன்றோ?
போயிற்றே என்றெண்ணிப் புலம்பாதே, உன்னைப்
பாட்டுத்தேர் தனிலேற்றி உலகெங்கும் விடுவேன்.
பாரியிசை குன்றிவிட வாரியுனைப் புகழ்வர்

காய்கின்ற செங்கதிரோன் இரவினிலே துயில்வான்
கன்னிநிலாப் பெண்மயிலும் பகலில்துயில் வாளே!
ஓய்வின்றி அலைகின்ற அழுகின்ற நண்பா!
ஓய்வெடுத்துக் கொள்வாய்நீ, உடம்புமெதற் காகும்?
மேய்கின்ற துயரத்தை என்னிடத்தில் விடுக.
மிதந்துவருந் தென்றற்பெண் மென்மேனி தழுவிப்
பாய்கின்ற இன்பத்துள் படிந்துமகிழ்ந் திடுக.
பாடுகிறேன் தமிழ்ப்பாட்டு, நல்லுறக்கம் வாய்க்கும்!

தென்மொழி அன்பர் திருமணம்!

தென்மொழி அன்பர் திரு. மாயிறைவன் (ரி. அ. மகாலிங்கம்) என்பார்க்கும், திரு. அன்புச்செல்வி (பிரேமா) என்னும் நங்கைக்கும், தி. பி. 1999 ஆடவைத்திங்கள் 27–ஆம் பக்கல் (10—7—68) அறிவன் கிழமை, சேலம்–3. இராச கணபதி தெருவில் உள்ள அவர் இல்லத்தில் நடந்த திருமணத்தின் நினைவாகத் தென்மொழியின் வளர்ச்சிக்கு உருபா. நூற்றுஒன்று அன்புடன் அளிக்கப்பெற்றது. திருமணச் செல்வரும், செல்வியும் எந்தமிழ் மொழிக்கும் நாட்டிற்கும் என்றும் பெருமைதரும் பெற்றியுடன் வாழ்வாங்கு வாழ, எந்தமிழ் அன்னை துணை நிற்பாளாக.

-பெருஞ்சித்திரன்.

மின்னணுவியல் (ELECTRONICS)

–த சலாவுத்தீன், அறி. இ. ஆ. ப.–

நாள்தோறும் மின்னணுவைப் பயன்படுத்திச் செய்யப்படும் கருவிகளின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே இருக்கின்றது. இந்த மின்னணுவால் என்ன செய்ய முடியாது? இது கேட்கப்படவேண்டிய கேள்விதான். ஏனென்றால் மின்னணுவைப் பயன்படுத்தி அத்தனைக் கருவிகள் உண்டாக்கப்பட்டுள்ளன; உண்டாக்கப்படுகின்றன.

மின்னணுவைப் பயன்படுத்திச் செய்யப்படும் எல்லாம் மின்னணுவியலின்பாற்படும். இக்கட்டுரையில் மின்னணுவியலைப்பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

வெற்றிடக் குழாய்:– (VACUUM TUBE)

எல்லா மின்னணுக் கருவிகளிலும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வெற்றிடக்குழாய்கள் பயன்படுத்தப்படுகின்றன. வெற்றிடமாக்கப்பட்ட குழாயில் ஒரு நேர்மின்வாயும். ஓர் எதிர்மின்வாயும் இருக்கும். இரண்டு மின்வாய்களுக்கும் இடைப்பட்ட இடத்தில் மின்னணுக்கள் வெளிப்படும். இத்தகைய குழாய் வெற்றிடக்குழாய் எனப்படும்.

மாழைக் கடத்திகளில் (Metallic Conductors) மின் ஏற்றத்தைக் கொண்ட கட்டற்ற மின்னணுக்கள் (Free Electrons) இருக்கின்றன. இக்கட்டற்ற மின்னணுக்கள் மாழையிலுள்ள இழுப்பு விசையினால் மாழைக்குள்ளேயே இருக்கும். மாழையை நன்றாக வெப்பப்படுத்தினால் இக்கட்டற்ற மின்னணுக்கள் வெப்பத்திறனைப் பெற்று மாழையைச் சுற்றியுள்ள வெளியில் (Space) செல்லுகின்றன. பாய்மங்களைச் சூடுபடுத்தினால் ஆவி எப்படி வெளியேறுகின்றதோ அதேபோல் இம்மின்னணுக்கள் வெளியேறும். இம்முறையில்தான் வெற்றிடக் குழாய்கள் வேலைசெய்கின்றன.

வெற்றிடக்குழாயில் எதிர்வாய் வெப்பப்படுத்தப்படுகின்றது. இதன் பயனாய் எதிர் மின்வாய்க்கும் நேர்மின்வாய்க்கும் இடையே மின் அழுத்த வேறுபாடு உண்டாகிக் கட்டற்ற மின்னணுக்கள் பாய்ந்து வெளியேறுகின்றன. இதன் விளைவாக மின்னோட்டம் உண்டாகின்றது. மின்னணுக்கள் எதிர்மின்வாயிலிருந்து நேர்மின் வாய்க்குத்தான் போகும். மறுதிசையில் செல்லா எதிர்மின்வாயை மின்சாரத்

தினாலோ, கதிரவன் ஒளியாலோ அல்லது வேறெந்த முறையினாலோ சூடுபடுத்தலாம். இவ்வெற்றிடக் குழாய்க்குள் இருதிசை மின்னோட்டத்தைச் செலுத்தினால் அஃது ஒருதிசை மின்னோட்டமாக மாற்றப்படுகின்றது. இவ்வமைப்பு வானொலிப்பெட்டிகளிலும், தொலைக்காட்சிப் பெட்டிகளிலும் (Television) பயன்படுத்தப்படுகின்றது

இவ்வெற்றிடக்குழாயில் பல குறைகள் இருந்தன.

அவையாவன:—

(1) எதிர்மின்வாய் ஒரு குறிப்பிட்ட அளவு வெப்பம் அடைந்த பிறகுதான் மின்னணுக்களை விடும்.

(2) பயன்படுத்தப்படும் இழைகள் எளிதில் எரிந்துவிடுகின்றன.

இவ்வாறு எரிந்துவிட்டால் வேறு வெற்றிடக் குழாயைத்தான் பயன்படுத்த வேண்டும். இக்குறைகளைச் சரிசெய்யப் பல ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. இதன்பின் புதிய குழாய் ஒன்று செய்யப்பட்டது. இதில் மின்னாற்றலைச் செலுத்தியவுடன், இது வேலைசெய்யத்தொடங்கிவிடுகின்றது. அதுமட்டுமல்லாது வெகு நாட்களுக்குக் கெட்டுப்போகாமலும் இருக்கின்றது. இதில் தொடர்ச்சியான மெல்லிய நுண்தொளையுள்ள (Magnesium di oxide) ஒளியம்–இரு–தீயதை, வெளியத் (Nickel) தகட்டின் மீது படியவைக்கப்படுகின்றது. உயர்ந்த வெப்பநிலையில் நேர்மின் ஏற்றத்தை இதில் ஏற்றிவிட்டால் இது வேலைசெய்யத் தொடங்கி விடுகின்றது. இந்த அமைப்பைக் கொண்டுதான் பல மின்னணுக் கருவிகள் தற்பொழுது செய்யப்படுகின்றன.

மருத்துவத்தில் மின்னணுவியல்:

நம் நாட்டிலுள்ள பெரும் மருத்துவமனைகளில் பல மின்னணுக் கருவிகள் பயன்படுகின்றன. இதில் 'புதிர்க்கதிர்க்கருவி'-யைப்பற்றி எல்லாருக்கும் தெரியும். மேலை நாடுகளில் இன்னும் சிறந்த கருவிகள் பயன்படுகின்றன. அதில் மிகச்சிறந்தது "மேற்கதிர்ப் பெருக்காடி" (Ultrascope) ஆகும். இஃது ஒரு குழாய்போன்ற அமைப்பை உடையதாகும். இஃது ஒரு கூட்டு நுண்பெருக்காடியுடன் இணைக்கப்பட்டிருக்கும். "மேற்கதிர்ப் பெருக்காடி"யுடன் இணைக்கப்பட்டிருக்கும். மேற்கதிர்ப் பெருக்காடி ஊதா மேற்கதிர் ஒளியுருவங்களை (Ultro Violet images) [மாந்தர்களின் கண்ணால் பார்க்கமுடியாத] பார்க்

கும் ஒளியுருவங்களாக மாற்றுகின்றது. இவ்வொளியுருவங்களின் பொருளை மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் அறிந்து கொள்ளலாம். மிகச் சிறிய ஒளியுருவங்களையும் இக்கருவி கொண்டு பார்க்கலாம்.

'ஆர். சி. ஏ' (R. C A.) ஆராய்ச்சிச் சாலையில் 'செங்குயினுமீட்டர்' (Sanguinometer) என்ற கருவியினைக் கண்டுபிடித்துள்ளார்கள். இதன்மூலம் குருதி உயிர்மங்களையும், மற்ற நுண்பொருள்களின் எண்ணிக்கையையும் அறிந்து கொள்ளலாம்.

மின்னணுக் குளிகை (Radio Pill)

இது $1\frac{1}{2}$ விரற்கடை நீளமுடையதாக இருக்கும். இது ஞெகிழி (Plastic) உறையால் மூடப்பட்டிருக்கும். நோயுள்ளவனுக்கு இது கொடுக்கப்படுகின்றது. அவன் அதை விழுங்கியதும் அஃது இரைப்பை, குடல், ஆகிய பாகங்களில் செல்லும் பொழுது, அங்கு ஏற்படும் அழுத்த மாறுபாட்டை ஒலிபரப்புகின்றது. இதை மற்றொரு கருவியின் மூலம் அறிந்துகொண்டு நோயாளியின் நோயை எளிதில் அறிந்து கொள்ளலாம். இக்குளிகையைப் பயன்படுத்திக் குடற்புண் (Ulcers) போன்ற நோய்கள் இருக்குமிடத்தைக் கண்டுகொள்ளலாம்.

வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டிகள் மேலைநாடுகளில் மருத்துவ மனைகளிலும், பள்ளிகளிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் அறுவை மருத்துவத்தை மருத்துவியல் படிக்கும் மாணவர்களுக்கு எளிதில் கற்றுக்கொடுக்க முடிகின்றது.

குருடருக்கு மின்னணுப்பார்வை:-
(Electronic Readers for the blind)

அமெரிக்காவிலுள்ள ஓர் ஆராய்ச்சிச் சாலையிலுள்ளோர் கண் பார்வையற்றோர்க்காகப் புதிய கருவியொன்றைக் கண்டுபிடித்துள்ளனர். இக்கருவி எழுத்துருவங்களை ஒலியாக மாற்றுகின்றது. இப்பொழுது செய்யப்பெற்றுள்ள மின்னணுக்கருவி, கையில் எடுத்துச் செல்லக்கூடிய வானொலிப்பெட்டி அளவில் இருக்கின்றது.

இதில் கீழ்க்கண்ட பாகங்கள் உள்ளன:—

1. அச்சிடப்பட்ட தாளின்மீது செல்லும் அமைப்பு

2. ஓர் அதிர்வுக்கரு (Transistorized Oscillator)

3. ஒலிபெருக்கி.

4. காதுக்குழல் (Earphone)

இவை மட்டுமல்லாமல் சிறிய ஒரு விளக்கும், ஒரு வில்லையும் (Lens) இருக்கின்றன. இந்த வில்லை அச்சிடப்பட்ட எழுத்தின் ஒளி யுருவை மின்னணுக்கண்ணில் விழும்படி செய்கின்றது. இம்மின்ன ணுக்கண் (Photocell) தன்மீது விழுந்த எழுத்தின் கருப்புப் பாகத் தின் அளவிற்கேற்ப, அதிர்வுக்கருவியைத் தூண்டிவிட, அஃது அதற் கேற்ப ஒலியை உண்டாக்குகின்றது. இவ்வொலியைக் கண் பார்வை யற்றோர் செவிக்குழலின்மூலம் அறிந்து கொள்ளலாம். இக்கருவியைப் பயன்படுத்தத் தெரிந்தவரால் ஒரு மணித்துளியில் 15 லிருந்து 30 சொற்களை அறிந்து கொள்ள முடியும். இக்கருவியில் இன்னும் பல மாறுதல்கள் செய்யவேண்டியுள்ளன.

பூச்சிகளைக் கொல்லும் மின்னணுவிளக்கு:-

பிரிட்டனில் இது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு செந்நீல மேற்கதிர் விளக்கும், அதைச்சுற்றி மின்சாரமுள்ள தண்டுகளும் இருக்கின்றன. கதிரவன் சாய்ந்த பிறகு பூச்சிகள் இவ் விளக்கால் கவரப்பட்டு அருகே செல்லுகின்றன. மின்சாரம் பாயக் கூடிய தண்டுகளுக்கு அருகில் 1 விரற்கடைத் தொலைவில் பூச்சிகள் வந்தால் அவற்றை அது தானே இழுத்துக் கொள்கின்றது.

மேலே சொல்லப்பட்ட மின்னணுக் கருவிகள் மிகச்சிலவே. இன் னும் பல கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றைப் பற்றி இன்னொரு கட்டுரையில் காண்போம். O

தென்மொழிப் பாடல்கள்!

அட்டைப்படப் பாடல்கள், கொள்கை முழக்கப்பாட்டு முதலியன உட்படத் தென்மொழியில் வெளிவந்த, வருகின்ற பெயரிடப்பெறாத பாடல்கள், உரைகள், குறிப்புரைகள் யாவும் பொறுப்பாசிரியர் பெருஞ்சித்திரன் (துரைமாணிக்கம்) அவர்களால் எழுதப்பெறுவன வாகும். இவற்றை முழுமையாகவோ பகுதியாகவோ ஆசிரியரின் முன் இசைவின்றி எவரும் எங்கும் எடுத்தாளக் கூடாது. தென் மொழியில் இதுவரை வெளிவந்த இத்தகைய பாடல்கள் வேறு சில ரின் பெயரால் ஆங்காங்கே தமிழன்பர்களால் எடுத்தாளப்படுதல் கண்டு வியந்தே இவ்வறிக்கை வெளியிடப் பெற்றது.

—அமைச்சர்.

மறைந்துவரும் தமிழ்ச்சொற்கள்-

சோம்பல் அடிமை அறியாமை யால்தமிழை
ஓம்பல் குறைவால் உலகவழக் கற்றொழிந்த
பைந்தமிழ்ச்சொற்கள் பலகோடி! ஈங்கதனால்
நைந்த தமிழர் நலிவு பலகோடி!
இன்று விழித்தோம்; இனியேனும் செந்தமிழை
நன்றுகப் பேணிவர நாம் முனைவோம்; நரற்புறமும்
சென்று மறைந்துவரும் செந்தமிழ்சேர் சொற்களை
ஒன்று திரட்டி, உரியபொருள் ஆய்ந்தெழுதி
இப்பகுதிக் கேவிடுக்க; ஏற்ற பயின்றிடுக:
செப்பம் மொழிக்குச் சிறப்பு

கீழ்க்காணும் சொற்களைத் தொகுத்து விடுத்தவர்
மு. மகிழரசன். சென்னை-34.

ஒரம் விழுதல்-குழந்தைகட்குத் 'தசைப்புரட்சி' ஏற்படுதல், [முறைதப்பிக் (குழந்தையைத்) தூக்குவதால் ஏற்படுவது]

மல்லாடுதல்- போராடுதல்-மல்லுக்கிழுத்தல்-போருக்கு இழுத்தல்

தொக்குத் தொக்காய்-மைய அரைக்கப்படாமல் இருத்தல்.

சாய்க்கை சாய்க்கையாய்-திட்டுத்திட்டாக அழுக்குப் படிந்ததாய்.

ஊம்புல்-துடைப்பப் புல்லில் இருக்கும் கூரிய முள்.

தமுக்குப் போடுதல்-ஆறப்போடுதல், சற்றுப் பொறுத்தல்

மட்டி-அடியில் மண்டிவிடும் சக்கை, தூள்.

கொந்துதல்-துண்டுதுண்டாக நறுக்குதல், வெட்டுதல், நையத்துணித்தல்.

ஒக்களித்தல்-குமட்டுதல், அடித்தொண்டையில் இருந்து புறம்தள்ளுதல்.

குன்னம் பிடித்தல்-(ஏக்கம்) நோயுற்ற கோழி சோர்ந்து உறங்கி பலுக்கல் வழிதல்போல் ஒடுங்கிக் கவலுறும் நிலை.

கோள்குத்துதல்-பிறனிடம் சென்று குறை (சிறுமை) கூறிப் பகை மூட்டுதல்.

அக்குறும்பு—அகக்குறும்பு. அக்குறும்பு- அழிசெயல் புரியும் ஆணவம்.

அட்டகாசம்—கும்மாளம் போடுதல், ஆரவாரக்கூத்து.

கப்பு—தீ நாற்றம்

கவுள்—இச்சொல் இற்றைநாள் தீநாற்றம் என்ற பொருளில் வழங்கி வருகிறது.

கவுச்சுக்கடை—புலால் வகை (நிறைந்த) கடை.

ஒத்தாசை—உதவி, உறு துணை.

கந்தணம்—நறுமணப் பொருள்.

நிமடன்—வல்லவன் (Expert). 'நிபுணன்' என்ற சொல்லுக்கு நேர் தமிழ்ச்சொல்லாகும்.

நோணி—பெண்குறி

குருமுட்(டு)டை—அறிவு கெட்டவன், மூளையற்றவன்.

கீழுள்ள சொற்களைத் தொகுத்து விடுத்தவர்
இரா. மருதக்கிழான், சேலியமேடு (தெ. ஆ.)

இவை ஆறும் மகளிர் காதணிகள்.

தோடு
முருவு
கிளிக்குருடு
ஐகோட்டுத்தட்டை
மாட்டல் (மாட்டுதல்-இணைத்தல் கூடியதாதல்)
தொங்கட்டான்-(தொங்கல்)

'குரு'டென்பது காதின் வெளிப்புறச் செவிள். இவ்வணியிற் கிளி பொறிக்கப் பட்டுள்ளமையான் இஃது 'கிளிக் குருடு' எனக் காதின் பெயரொடு வழக்கிலுள்ளது.

தலைச்சன்—தலைமகப்பேறு.

இடைச்சன்—இரண்டாம் மகப்பேறு.

சேடை—நெற்பயிர்க்கெனக் கழனியிற் குழப்பப்படும் சேறு.

பொறும்பு—சேடைக்குப்பின் கழனியிற்காணும் மிகமிகச் சிறிய மேடு.

திம்மாக்கு—திறனில்லார் (இஃது ஆண், பெண் இருவரையும் குறித்து வருகிறது)

மக்கட்டை—உதவாக்கரை; அறிவிலி.

எகுத்தாறு-பெருஞ்செருக்கு.

வெட்டாதுட்டி } தாறுமாறாகப் பேசுவோர்; போக்கிலி நடத்தை
தலைவெட்டி } உடையோர்; தீ நெறியர்.

நருக்கு-விலாங்குத் தன்மையின்மை.

தலுக்கு-பக்குவம் (அவன் எப்போதுமே தலுக்காகப்பேசி, செயலை முடித்துக்கொள்வான்)

சள்ளை-பயனிலாதன-தொல்லை.

கொம்பரணை-ஆடுமாடுகளுக்குப் பனைஓலை, நெற்கதிர் முதலியவற்றான் ஆக்கும் கொம்பணி.

மறுமாடி-வீட்டுக் கூரையில் அகலப் பகுதியின் "இறக்கம்"

பொரைச்சல்-வீட்டின் அகம், புறம், சுவர்ப்பகுதிகள், மரப் பொருள்கள் முதலியவற்றிற் காணப்படும் மிகச் சிறு குழிகள்; சிதைவுகள்.

மறிக்கை-ஈனாத ஆடு.

தொதுக்கை-உரமற்ற ஊன் உடல்.

சலுப்பு-நிலக்கடலை, மரவள்ளிக்கிழங்கு, பனங்கிழங்கு முதலியன மிகுதியாய்நீரூறிக், கெட்டு அதனின்றெழும் தீ நாற்றம்; சுவைப்பின் அது தரும் கெட்ட சுவை.

எகு அல்லது மாடம்-பேரீந்தில் கள்ளெடுத்தற்கென அதன் தலைப் பகுதியில் குழிக்கப்படும் குழி.

சுளுக்கு-எலும்பு இடம்விட்டு இடம் பிறழ்தல்-உணர்வு நரம்புப் புரட்சி.

கீழுள்ள சொற்களைத் தொகுத்து விடுத்தவர்
கோ. சண்முகானந்தம் ஆசிரியர், கோட்டேரிசிற்றூர்,
திருமுதுகுன்றம் வட்டம்.

அறவம்-ஓசை, ஒலி.

ஆறம்-முறை, தடவை.

உமுறு-பூவை விட்டு வெளிவந்த பிஞ்சு.

உண்டாயிருத்தல்-பெண் கருவுற்றிருத்தல்.

ஊமத்தங்காய்-பொய்க்காய் (பலாமரத்தில் காய்த்து இளமையிலேயே பூஞ்சநிறத்துடன் பழுத்து விழும்)

ஊட்டி-தொண்டை.

ஏரகூடை-பிரம்பினால் பின்னப்பட்ட கூடை.

வணிகொண்டவன்–பைத்தியம் பிடித்தவன், கெட்ட ஆவிபிடித்தவன்.

கட்டுக்கழுத்தி–மங்கல மங்கை, கணவனிருக்க வாழ்பவள்.

கன்னு–வருந்து, சுருங்கு.

கத்துக்குழாய்–ஆடுமாடுகளுக்குக் கரைத்த மருந்தை ஊட்டப் பயன்படுத்தும் மூங்கில் குழாய்.

காடி-பள்ளம், புளிப்பு.

காணம்ஆட்டுதல்–செக்கில் எண்ணெய் ஆட்டுதல்.

கீழுள்ள சொற்களைத் தொகுத்து விடுத்தவர்

அ. வெள்ளியங்கிரி, தலைமை ஆசிரியர், ஊ. ஒ. எழுநிலைப்பள்ளி

தைலாம்பாளையம், ஒழலக்கோயில், (அ நி.) கோபி வட்டம்.

தமிறு–மரத்தில் துளையிட உதவும் இரும்புக் கருவி.

சங்கடை–குழந்தைக்குப் பாலூட்டும் சிறு கிண்ணம்

முகதலை–மூன்றுபாதைகள் பிரியுமிடம்.

தாட்டும்–போதும்.

துள்ளுக்கிடா–துள்ளிப் பறந்து செல்லும் ஒரு பூச்சி.

புடக்காணி–வீட்டின் பின்புறம் உள்ள சிறுநீர் கழிக்குமிடம்.

கண்தூடு–கண் இமை.

ஏகாளி–வெளுப்பார்.

மாதாரி–தோல்தொழில் செய்பவன்.

இருப்பதி–தறியில் நெசவாளர் உட்காருமிடம்.

பிரி–தக்கை.

அண்டை–தக்கை.

குறிக்கோல்–குறிப்பிட்ட நீளமுள்ள கோல்.

ஒருபனைப்பொழுது–காலையில் 8-மணி நேரத்தையும், மாலையில் 4-மணி அளவையும் ஒருபனைப்பொழுதென்பர்

சொப்பு–மட்கலயம்.

மறுக்களித்தல்–சொன்ன சொல்லிலிருந்து பிறழ்தல்.

பட்சி–இலக்கு

புரை–மடிப்பு.

கோணூசி–கோணிப்பை தைக்கும் ஊசி.

கொக்கரை வட்டி–வளைந்தது (புளியங்காயைக் கொக்ககரவட்டி என்பர்.)

பாவேந்தர் நன்றிக்கடன்.

ஈரோடை, தொலைபேசித் தொடர்பகத்தைச் சேர்ந்த திரு. உலக நாதன் (உலகன்) அவர்கள் இரண்டாம் முறையாகத் தொகுத்து விடுத்த தொகை. உருபா

திரு இரா. சுப்பிரமணியன் 5-00

திருவாளர்கள்: எம். சீநிவாசன், அ. மனோகரன், கே. கே. நடராசன், செல்வி எம். பானுமதி, செல்வி ஆர். சாரதாம்பாள், திருமதி. எசு. இராமமங்களம் (உருபா2 மேனி) 12-00

உருபா 1 மேனி கொடுத்தவர்கள்

திருவாளர்கள்: வி. சண்முகசுந்தரம், எசு. இராமகிருட்டிணன், சீ. ப. சொக்கலிங்கம், பால்ராசு, பி. அரங்கசாமி, கே. வேங்கடேசன், சு. துரைராசன், ஆ. பரமசிவன், பொ. பெரியசாமி, என். எசு. துரைசாமி, க. செல்வராசு, வி. எசு. நாகராசன், பி. காசி, கி. சு. கிருட்டிணமூர்த்தி, நடராசன், எம். சரவணன், பர்னபாசு, அ. மு. சாதிக், சுப்பராமன், சி. பாலசுப்பிரமணியன், டி. எசு. தட்சிணாமூர்த்தி, சு மகாலிங்கம், இல. பெ. கந்தசாமி, சி. வேங்டேசன், செல்வி. வி. கமலா, திருவாட்டியர்: எசு. பருவதம், கே. ஆர். அன்னபூரணி. 27-00

பெங்களூர்-6 திரு. மணவாளன் என்பாரும், அவர்தம் நண்பர்களும் வழங்கிய தொகை. 40-00

பெங்களூர்-21. பி. எம். எம். ஆர். தையலகத்தைச் சேர்ந்த அன்பர்கள் அளித்தவை.

திரு. மு. கு கோவிந்தராசு 5-00

உருபா 2 மேனி அளித்தவர்கள்

திருவாளர்கள்: கோ. பழநி, ஏ. சண்முகம், துரைராசு, கிருட்டிணன், பி. பி. இராசன், பெ. மு. முனிரத்தினம் 12-00

உருபா 1 மேனி கொடுத்தவர்கள்

திருவாளர்கள்: ஆ. கோதண்டன், ஏ. முனிரத்தினம், ஏ. வேங்கடேசன், மாணிக்கம், கண்ணன், தாசு, உபேந்திரன் 7-00

திரு சம்பந்தமூர்த்தி, பெங்களூர்-16. 2-50

திரு: விக்டர் 2-00

திரு: தேவேந்திரன் ,, 1-50

திரு. சம்பந்தமூர்த்திவழி உருபா 1 மேனி கொடுத்தவர்கள்

திருவாளர்கள்: சாமராசு, இராமதாசு, வேங்கடசாமி, சி, வேணு

கோபால், புருடோத்தமன், இராசவேலு, கிருட்டிணன். கிருட்டிண மூர்த்தி, கிருட்டிணன், மேதிவ், கண்ணன், சண்முகம், தனசிங், பி. வி. ராவு, இரத்தினம், சிரீதரன்: சு. கருணா, சோசப்பு, கிருட்டிணன், சுந்தரராசு, சார்சு, இராமரத்தினம், நாதன், சார்சு வேகாசு, இராசன், மகேந்திரன். சாரதா, துரைராசு. காந்தராசு, மதுரை, சாமியப்பன், முருகேசன், இராசாராம், மூர்த்தி 34-00

அவர்வழி 50 காசு மேனி கொடுத்தவர்கள்

திருவாளர்கள்: சுப்பிரமணியன், ஆறுமுகம், சேகர் பாண்டியன், கிளாக்சு மாமர், பழநி, மோகன், இராசு, சுந்தரராசு 4-00

குடந்தை. ரெ. கோவிந்தராசு 6-00

அவர்வழி உருபா 3 மேனி வழங்கியவர்கள்

திருவாளர்கள்: பி. தங்கராசு, மகாலிங்கம், கலியபெருமாள் 9-00

உருபா 2 மேனி வழங்கியவர்கள்

திருவாளர்கள்: விசயேந்திரன், செல்வி: இலலிதா, செல்வி: சீதா இலக்குமி 6-00

அவர்வழி உருபா 1 மேனி கொடுத்தவர்கள்

திருவாளர்கள்: கே. சுப்பிரமணியன், சி. குமாரசாமி, கண்ணன், கிருட்டிணமூர்த்தி, வி. பி. சுப்பிரமணியன், சடகோபன், க. ச. செகநாதன், வி. வேங்கடராமன், ஆர். வி. வேங்கடராமன், டி. குருசாமி, முத்துவேல், தங்கராசு, அனந்தன், தங்கவேலு, ஆரோக்கியசாமி, கே. கோபாலகிருட்டிணன், இராமமூர்த்தி, வின்செண்ட், இராமசாமி, இராசாராம், வி. சண்முகம், பாண்டியராசு, தனபாலன், கோபாலகிருட்டிணன், இமானுவல்தாசு, வீரையன், துரைராசு, சண்முகவடிவேலு, அரங்கன், இராசகோபால், பிச்சைப்பிள்ளை. அழகப்பன், செல்வி. சுப்புஇலக்குமி, செல்வி. தங்கப்பாப்பா, திருவாட்டி. கமலா. 35-00

207-00

பெங்களூர் பி. எம். எம். ஆர். தையலக அன்பர்கள் பணவிடை அனுப்பிய கழிவுத்தொகை. 0-50

மொத்தம்.	206-50
முன்மொத்தம்.	937-85
தொகு மொத்தம்	1144-35

(தொடரும்

உணர்வும், தமிழுணர்வும் பெறுகின்றனவோ அன்றே பெரும்பான்மைத் தமிழரின் விடிவு நாள்.

சேயிளங்கண்ணன், அமரபூண்டி, பழனி.

O தனித்தமிழ் காக்கும் தலைவ! வணக்கம். எத்தனைப்பேர் எத்தனைப் பாவியங்கள் எழுதிக் குவித்தாலும், எத்தனை நூற்பாக்கள் இயற்றினாலும் அவை யாவும் தங்கள் 'நூறாசிரியம்' ஒன்றிற்கு ஈடாகா. 'தமிழ்ச்சிட்டி'ல் 'பிழையில்லாமல் பேசுங்கள், எழுதுங்கள்' என்ற தலைப்பின்கீழ்ப் புலவர். தி. நா. அறிவுஒளி அவர்கள் எழுதி வரும் இலக்கண விளக்கம் சிறுவர்களுக்கு மிக்க பயனளிக்கிறது. இதேபோல் 'தென்மொழி'யிலும் யாப்பிலக்கணத்தை எளிய முறையில் இதழ்தோறும் தொடர்ந்து வெளியிட்டால் எம்போன்ற இளைஞர்க்கு மிக்க பயன் விளைவிக்கும் என நினைக்கிறேன். வெல்க தனித்தமிழ்!

—ந. ஆ. கிருட்டிணன், நத்தம் (அஞ்) திருப்பத்தூர் (வ.ஆ.மா.)

O அன்புத் தலைவ! அருந்தமிழ்ப் புலவா! வணக்கம்கூடத் தெரிவிக்க இயலாத நெஞ்சினனாய், விழிகளில் நீர் மல்க இம்மடலை எழுதுகின்றேன்.

அறியாமை நிரம்பிய தமிழகத்தை நோக்கித் 'தமிழகம் உயர்ந்து விட்டது; தமிழர்கள் விழிப்புற்று விட்டனர்' என்று கூறிப் பெருகி வரும் அரசியல் சூதாடும் கோமாளிகளின் செயல்களை எண்ணி நான் மிக வருந்துகிறேன். இவ்வளவு அறியாமை நிரம்பிய தமிழகத்தில் தங்கள் 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' போன்ற தாளிகைகள் செய்யும் தொண்டு பயனுள்ளதாகுமா என்பதே என் ஒரே கவலையாக இருந்து வருகின்றது. ஆனால் என் உள்ளமோ, உணர்வோ சோர்வடைய வில்லை. என் உயிர் என் உடம்பில் இருக்கும்வரை 'தென்மொழி'க்குத் துணைசெய்வேன் என்று உறுதி கூறுகின்றேன்.

—சி. செந்தமிழரசு, சேந்தன்குடி, நகரம் அஞ்சல்,

O மொழிமுதல் அறிந்த தமிழறிஞ! வணக்கம். கடந்த இரண்டாண்டுக் காலமாகத் தென்மொழியைத் தொடர்ந்து படிக்கின்றேன் அதன் ஒவ்வொரு பகுதியும் என்னுள்ளத்தை ஈர்ப்பதாகும். நூறாசிரியம் கழக இலக்கியங்களுடன் ஒப்பிடும் தகுதி வாய்ந்தது. தாங்கள் கருவூர் திரு. பாரிமுகில் திருமணத்திற்கு தலைமையேற்க வந்தக்கால் தங்களை நேரில் கண்டும் தங்களின் தனித்தமிழ்ச் சொற்பெருக்கினைக் கேட்டும் இன்புற்றேன். பல துன்பங்களுக்கிடையே தென்மொழியைத் தொடர்ந்து நடத்துகிறீர்கள் என்று அறிகிறேன். 'துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை, என்ற தமிழ்மறைக் கூற்றுக்கிணங்கத் தொடருங்கள் இன்பம் பயக்கும் வினை; துரத்துங்கள் துன்பத்தினை, நல்லதொரு தமிழ்க் குமுகாயம் அமைக்கத் தங்களால்தான் முடியும் என்று நம்புகின்றேன். தென்மொழியை என் அலுவலக நண்பர்களிடையே பரப்ப முயன்று வருகிறேன். என்னாலான உதவி என்றும் உண்டு.

அன்பன், இரா. அருமருந்தலைவன், கருவூர்.

O மாலை மருட்ட மாலைச் சிறுகால்
ஆலை வாய்வைத் தென்னை அரைப்ப
மதியம் தீய்ப்ப மனமலர் மயங்க
மதிமிகப் பேதுற மயங்கினேன் தோழி
வளர்தமிழ் வாழ்த்தி வளர்த்திடும் தலைவன்
தளரா நடையினன் தென்மொழி வாரா
திருப்பயான் கண்ணீர்த் துளிர்த்து
அரும்பணி அஞ்சலன் முகம்பார்த் திருப்பதோ?

இரா. அப்பாசி, கனையூர், குருவிநத்தம் (அஞ்) கடலூர் வழி.

பாவாணரின் அரிய நூல்!

வெளிவந்து விட்டது!

o

இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?

o

"இந்தியா பன்மொழி, இன, மதங்கொண்ட பன்னாட்டு உட்கண்டமாதலால், ஒற்றுமையே (Unity)யன்றி, ஒருமை (Oneness) ஒருமைப்பாடு (Integration) ஓரியன்மை (Uniformity) என்பவற்றைப் பெறமுடியாது"

—என்று தெள்ளத் தெளிவாக ஆராய்ந்து கூறி, வரலாற்று உண்மைகளுடன் மெய்ப்பிக்கப் பெற்றுள்ள சிறந்த நூல்.

o தென்மொழியன்பர் ஒவ்வொருவர் கைகளிலும் மிளிரவேண்டிய அரிய நூல்!

உடனே வாங்கிப் படியுங்கள் விலை 1 உருபா.

அஞ்சல் கட்டணம் தனி.

கிடைக்குமிடம்:—

திரு. தே. மணி,
ஆ. 1135. இரண்டாம் மேற்குக் குறுக்குச்சாலை,
காட்டுப்பாடி விரிவு. (வ. ஆ.)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.